بسم الله الرحمن الرحيم

அல்கலாம்

AL-KALAM

பத்திராதிபர் :—கூ. அ. அப்துல் மஜீத்.

வால்யூம் 2	1925௵ பிப்ரவரி௴	பகுதி 2

சத்தியபிரசாரம்

அநியாயம் வழிகேடு முதலியவைகள் நிறைந்து இருள்சூழ்ந்த காலத்திலுங்கூட ஒரு வகுப்பார் உண்மையானவர்களாயும் உண்மையை வெளியிடுகிறவர்களாயு மிருப்பார்கள் என்பது உண்மையே. நபிமார்கள் ஜனனமான காலத்திலுங்கூட அவர்கள் ஜனனமாவதற்குமுன்பிருந்தே ஒரு வகுப்பார் சத்தியத்தைக் கடைபிடித்தவர்களாயிருந்ததைப் பார்க்கலாம். உலகில் அமைதி யின்மையும், அநியாயமும் உச்சஸ்தானத்தை யடைந்துவிட்ட காலத்திலேயே நபிமார்கள் ஜனனமானார்கள். ஆயினும் அப்படிப்பட்ட இருள்சூழ்ந்தசமயங்களிலும் சத்தியத்தைக் கடைபிடித்த வகுப்பொன்று இல்லாதிருக்கவில்லை.

யூதர்களும் அவ்வகுப்பைச் சேர்ந்த உலமாக்களும் வழிகெட்டுப் போயிருந்த விபரீத காலத்திலுங்கூட ஒரு சிறிய வகுப்பார் உண்மையைப் பிரசாரஞ் செய்கிறவர்களாயும் நல்லனவற்றை ஏவுகிறவர்களாயுமிருந்தனரென்று "மாயிதா" என்னும் சூராவில் வரையப்பட்டிருக்கின்றது.

அநியாயம், அசத்தியம், வழிகேடு முதலியவைகளுக்கு செல்வாக்கேற்பட்டிருந்த ஒவ்வொரு காலங்களிலும், ஒரு வகுப்பு சத்தியபிரசாரஞ் செய்யக்கூடியதாக இருந்துவரவேண்டியது அவசியமென்பதே அல்லாஹுதஆலாவின் தீர்மானமெனத் தெரிகின்றது. இது சம்மந்தமாய்க் குர்ஆன்ஷரீபில் அநேக ஆதாரங்களிருக்கின்றன. (மாயிதா, ஆலெயிம்ரான் இவைகளைப்பார்க்க).

அஹ்லெகிதாபுகளைச் சேர்ந்த உலமாக்கள் கூட்டங்கூட்டமாய் உதாரணமற்ற வழிகேடுகளுக்காளாகி விட்டனர். என்பது உலகப்பிரசித்தம். ஆயினும் அச்சமயங்களிலுங்கூட ஒரு சிறிய வகுப்பு நல்லனவற்றை ஏவிக் கெடுதிகளை யகற்றுகிறவர்களாயும் வேதத்தை யோதுகிறவர்களாயும், வணக்கம், தர்மம் முதலியவைகளில் சதா ஈடுபட்டவர்களாயும் இருந்தார்களல்லவா ? இவர்களைக் குர்ஆன்ஷரீபு "ஸாலிஹீன்" எனக் கூறுகின்றது.

இஸ்லாம் உதயமாவதற்கு முன் அரப்தேசமும் அஜம்தேசமும், குப்ரு வழி கேடு காரணமாய், அல்லாஹுதஆலாவின் முனிவுக்கிலக்காகி யிருந்துங்கூட அக்காலத்தில் அஹ்லெகிதாபைச் சேர்ந்த ஒரு சிறிய கூட்டம் சத்தியத்தைப் பாதுகாப்பதா யிருந்தது. இக்கூட்டத்தார் பலவிடங்களில் சிதறிக் கிடந்தனர். (புகாரி என்னும் கிதாபைப் பார்க்க.) அநியாயம், அசத்தியம், எதேச்சாதிகாரம், வழிகேடு, துர்க்கிருத்தியம் முதலியவைகளின் எத்தனையோ இருளை உலகம் பார்த்திருக்கின்றது. ஆயினும் இஸ்லாம் உதயமாவதற்கு முன்னிருந்த பேரிருள் ஆச்சரியப்படத் தக்கதும், பிரமிக்கத்தக்கதும் உதாரணமற்றதுமென்பது உலகப்பிரசித்தம். இப்பெரும் இருள்சூழ்ந்த காலத்திலும் ஒரு சிறிய சத்தியப்பிரசார வகுப்பாரிருந்தார்களாயின் மற்ற நபிமார்கள் ஜனனமானகாலத்தில் சத்தியப் பிரசாரவகுப்பார் இருந்து வந்தார் களென்பது ஆச்சரியமல்ல.

இவர்கள் நல்லதை யேவிக்கெடுதிகளை யகற்றுகிறவர்களாயும், ஜனங்களுக்கு நல்வழி காட்டுகிறவர்களாயு மிருந்தனர். இவ்வகுப்பார் அந்தந்தக் காலங்களில் உதயமாகும் நபிமார்களைப் பின்பற்றுவதில் முதன்மையானவர்களாயு மிருப்பார்கள். அசைக்கமுடியாத பெரும் உறுதிக்குரித்தானவர் இவர்களே.

இவர்கள்தான் நபித்துவத்தின் பிரகாசத்தைப் பெற்றவர்கள். இவர்களின் மூலமாய் உலகத்தில் ஜ்வொலிக்கும் பிரகாசம் நபித்துவத்தையொட்டியதாகவே யிருக்கும். சத்தியம், நியாயம், தர்மம் முத

லியவைகளடங்கலும் நபித்துவத்தின் ஆதரவைப் பெற்றதாகவேயிருக்கும். நபித்துவத்தின் ஒளியைப்பெறாத காரியங்கள் தோற்றத்தில் எத்தகைய உயர்பதவியைப் பெற்றிருந்தாலும் கடைசியில் உண்மையான ஜெயத்தை அடையமுடியாது.

நபித்துவமல்லாதவைகளை விட்டு நீங்கி, நபித்துவத்தின் ஒளியைப்பெற்று, சொல், செயல், கொள்கை முதலிய ஒவ்வொன்றிலும் நபிமார்களைப் பின்பற்றிச் செய்யப்படாத காரியங்கள் முடிவில் உபயோகமற்றவைகளே. நபித்துவத்தின் பிரகாசத்தைப் பெற்றுக் கொண்ட ஒளிக்குத்தக்க அந்தஸ்தே யேற்படும். அவரவர்கள் பெற்றுக் கொண்ட ஒளியினளவுக்கேற்ப அவர்களுக்கு அந்தரங்கமாயும், பஹிரங்கமாயும் ஜெயமேற்படும்.

நபிமார்கள் சமமாகவில்லாமல் பலதரப்பட்ட கீர்த்தியை யடைந்திருப்பது போலவே அவர்களைப் பின்பற்றிய சத்தியப்பிரசாரர்களுடைய அந்தஸ்தும் பலதரப்பட்டவைகளாக விருக்கும். சத்தியப் பிரசாரர்கள் அவரவர்களின் அறிவு, விளக்கம், கல்வி, ஞானம், சொல், செயல் முதலியவைகளுக்கேற்ப சிற்சில விஷயங்களில் முன்னேற்றமடைந்திருப்பார்கள். ஆயினும் சிலர் எல்லாத்துறைகளிலும் மேம்பாடடைந்திருக்கக்கூடும். ஒவ்வொரு காலத்திலும் சத்தியப்பிரசாரர்களிருந்துவந்தார்களாயினும், அவர்களுள் சிலரின் பிரசாரத்தால் உலகில் ஒளி வீசிக்கொண்டிருந்ததாகத் தெரியவில்லை. சத்தியபிரசாரர்கள் செல்வாக்கில்லாதவர்களாயும், போதிய தைரியமில்லாதவர்களாயுமிருந்தால், அவர்களுடைய பிரசாரம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது இல்லத்தில்மட்டும் தங்கிவிடும். விசாலமான உலகத்தில் வேலைசெய்வதற்குத் தகுந்த சக்தியில்லாத சத்தியப்பிரசாரர்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் வேலைசெய்வது போதுமெனக் கருதுவார்கள். ஒவ்வொரு வஸ்துக்களும் பலதரப்பட்டவைகளாக இருப்பதுபோல் சத்தியப்பிரசாரர்களும் பலதரப் பட்டவர்களாகவிருப்பது சகஜமே. கெடுதியைச் செய்யவொட்டாமல் தன்னைத் தடுப்பதும் சத்தியப்பிரசாரமே. தன்னை நெருங்கிய உறவினர்கள் கெடுதியைச் செய்யாமல் தடுப்பதும் சத்தியப்பிரசாரமே. தன் தேசத்திலுள்ளவர்கள் கெடுதியைச் செய்யவொட்டாமல் தடுப்பதும் சத்தியப் பிரசாரமே. இல்லம், குடும்பம், தேசம் என்ற கட்டுப்பாட்டை விட்டு நீங்கி, தன் காலத்தின் எல்லாக் கெடுதிகளையும், முன்பின், வலம் இடம் என்ற வித்தியாசமின்றி அகற்றுவதற்காக வேலைசெய்வதும் சத்தியப்பிரசாரமே.

முஸ்லிம்களின் பாதையில்கிடக்கும் கல், முள் முதலியவைகளை யகற்றுவது சத்தியப் பிரசாரமாகவும், ஈமானின்கிளையாகவும் இருப்பதுபோல், எல்லா சமூகங்களினுடைய் பாதையில் குறுக்கிட்டிருக்கும் அசத்தியத்தின் கல், முள் முதலியவைகளை யகற்றுவதும் ஈமானின் கிளையாகவும் சத்தியப்பிரசாரமாகவும் இருக்கின்றது.

மேற்கூறப்பட்டுள்ள எல்லா, சத்தியப்பிரசாரங்களும் ஒரே அந்தஸ்தையுடையதாக விருக்க முடியுமா? தன்னையும் தன்னைச்சேர்ந்த உறவினர்களையும் காப்பாற் றுவதற்காகச் செய்யப்படும் பிரசாரம், உலகத்தைக் காப்பாற்றுவதற்காகச் செய்யப்படும் பிரசாரத்தின் கீர்த்தியை அடைவதெங்ஙனம்?.

உலகத்தை சீர்திருத்துவதற்காகச் செய்யப்படுங் காரியங்கள் சத்தியப் பிரசாரமாக விருப்பதுபோல், தன்னைச் சேர்ந்தவர்களைச் சீர்திருத்துவதற்காகச் செய்யப்படும் முயற்சிகளும் சத்தியப் பிரசாரமே. இவ்விரண்டு பிரசாரங்களுக்கும் அல்லாஹ்வுத ஆலாவிடத்தில் கூலியுண்டென்பது திண்ணம். ஆயினு மிவ்விரண்டிற்கும் கூலி ஒரே விதமானதாக விருக்கமுடியாது. உலகத்தை உன்னதஸ்திக்குக் கொண்டுவர பாடுபடுகிறவர்களும் சத்தியப்பிரசாரர்களே. தன்னைச் சுற்றியுள்ளவர்களை உத்தமர்களாக்க முயற்சிக்கிறவர்களும் சத்தியப் பிரசாரர்களே. இவ்விரண்டு பிரசாரர்களுக்கு மிடையில் விசேஷ வித்தியாச மிருக்கின்றது.

சத்தியப்பிரசாரர்கள் பலதரப்பட்டவர்களாக விருப்பார்களென்பதை மேலே வரைந்திருக்கின்றோம். இவர்களை இருவகுப்பினராய்ப் பிரிக்கலாம். இவ்விருவகுப்பினருள் முதலாவது வகுப்பார் நபித்துவத்தின் ஒளியைப் பூரணமாய் பெற்றுக்கொண்ட உயர்தரமான பிரசாரர்களாகும். மற்றொரு வகுப்பார் சாதாரண சீர்திருத்தக்காரர்களே.

இவ்விரண்டாந்தரமான பிரசாரர்களின் பிரசாரமானது முடிவில் எப்பலனையு மளிக்கமாட்டாது. இவர்களின் வார்த்தைகள் போதிய சப்தமின்றி மெதுவாகவே யிருக்கும். தன்னைத்தானே மறந்து நித்திரையில் ஆழ்ந்து கிடப்பவர்களை இவர்களின் சப்தம் விழிக்கும்படிச் செய்யாது. ஆகவே இவர்களின் சப்தத்திற்குப் பெருங்கீர்த்தியேற்படுவதில்லை. உண்மையில் ஜனங்களின் ஹிருதயங்களை யிழுக்கக்கூடிய வன்மையை இவர்கள் பெற்றிருக்க மாட்டார்கள். ஆச்சரியத்தை மூட்டக்கூடிய உண்மையான கல்வி, ஞானம், குணாதிசயங்களில்லாதவர்களின் பிரசாரம் விசேஷ நன்மையை யெய்த முடியுமா?

அன்றியும் இவர்களின் பிரசாரம் உண்மையான சட்டதிட்டங்களையும், ஒழுங்கான முறைகளையும் நபித்துவத்தினறிவு செய்கை பிரகாசம் முதலியவைகளையும் பின்பற்றியதாக விருக்கமாட்டாது.

அல்லது குர் ஆன், ஹதீது இவ்விரண்டின் மூலமாய் ஏற்படும் பரிசுத்தமான மேம்பாட்டை அடைந்திருக்க மாட்டாது. இவ்வரிய இலக்ஷணங்களில்லாத பிரசாரம் கெடுதியை யகற்றக்கூடியதாயும், சீர் திருத்தத்தைப் புரிவதாயும், நன்மையைப் பாதுகாப்பதாயு மிருந் தாலுங் கூட இப்பிரசாரத்தில் பல பிசகுகளும், தவறுகளும், குற்றங் களும் மலிந்து கிடக்குமென்பது திண்ணம். அல்லாமலும் இது பற் பல இருளுக்கிரையாகியும் கெட்ட மனத்தோற்றத்திற் குள்ளாகியும் "பித்அத்து," "முஃததாத்து" என்னும் ஆபாசங்களிற்சிக்குண்ட தாயுமிருக்கும். ஆதலின் இப்பிரசாரம் கீர்த்தியையிழந்து ஜெயம்பெற முடியாமல் போகின்றது. இப்பிரசாரமானது அடிப்படையைக் காப் பாற்றுவதற்குப் பதிலாக சாதாரண ஓர் கிளையை வேறெனக்கருதி, அதைக் காப்பாற்றுவதற்குத் தன் சக்தியெல்லாம் விரயஞ் செய்கின் றது.

அல்லது சத்தியபிரசாரஞ் செய்வதற்காக வெளிக்கிளம்பி, சுன் னத்தின் ஒளியைப் பெறுமல் பித்அத்தின் இருளில் அகப்பட்டுக் கொள்ளுகின்றது.

* * *

சத்தியபிரசாரம் மகா பெரிய உன்னத ஊழியமாகும். இவ்வூழி யத்தைப்புரியும் வழிச்செல்லுவதற்குப் பாடுபடுகிறவர்களைச் சிலாகிக் காமலிருக்க முடியாது. இவர்களின் நல்லெண்ணத்தை எவரும் பாராட் டியே யாகவேண்டும். ஆயினும் இவ்வூழியத்திற்கு அவசியமான கல்வி, அறிவு, பெருந்தன்மை, உறுதி முதலியவைகள் இன்றி யமையாதனவாகும். இவ்வரியவைகளை அடையாதவர்கள் சொற் பகாலத்திற்குள் முதுகு காண்பித்து ஓடிவிடவுங் கூடும். சத்தியப் பிரசாரர்களின் தவறுதலும் சிறிய குற்றமும், ஆயிரக்கணக்கான வர்கள் சேர்ந்துசெய்யும் பாவத்தைக்காட்டினும் கொடியனவாகும். ஆகவே இக்குற்றம் சாமான்யமாய் மன்னிக்கப்படமாட்டாது.

உஸ்வயெஹஸனு.

(17-வது பக்கத் தொடர்ச்சி).

"உங்களின் நெருங்கிய உறவினர்களுக்கு அல்லாஹுத ஆலாவின் தண்டனையை யெடுத்துக் காண்பித்து அவர்களிடையே பயத்தையுண்டு பண்ணுங்கள்", என்னும் திருமறைக்கேற்ப, நாயகமவர்கள் தங்களின் குடும்பத்தினர்களையும், சமூகத்தினர்களையும் ஒன்று கூட்டி அவர்களை நோக்கி நபித்துவத்தின் தொனியால் செய்த உபதேசமாவது:—

"ஓ குறைஷி கூட்டத்தினர்களே! ஓ குலையின்மக்களே! ஓ அப்து முனாபின் சந்ததிகளே! ஓ அப்துல் முத்தலிபின் புத்திரர்களே! ஓ முஹம்மதின் (ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்) புத்திரியாகிய பாத்திமாவே! உங்களை நரகம் கரித்து விடாமல் தங்களைத்தாங்களே காப்பாற்றிக்கொள்ளுங்கள். கியாம நாளன்று என்னால் உங்களுக்கு நன்மையையாவது தீமையையாவது செய்ய முடியாது.

"ஓ பாத்திமாவே! எனக்கு உன்னோடு தேகசம்மந்தமே யுண்டு. இச்சம்மந்தத்தின் கொடியை உலகத்தில் மட்டுமேயாம் பசுமையாக இருக்கும்படிச் செய்யக்கூடும்".

இஃதுமட்டு மின்றி பல குறிப்பான சந்தர்ப்பங்களில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தங்களின் மனைவிகளுக்கும் குடும்பத்தாருக்கும் நல்லதை யேவிக் கெடுதிகளையகற்றுகிறவர்களாகவேயிருந்தார்கள். நாயகமவர்களருளியதாக "உம்முஸல்மா" ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூரியதாவது:—

"சுப்ஹானல்லாஹ்! வானத்திலிருந்து அமைதியின்மை, கெடுதி முதலியவைகளின் மழை பொழிகின்றது. நன்மையின் புதையல்கள் வெளியாகிவிட்டன. அறைகளில் உறங்கும் மாதர்களை (நாயகமவர்களின் மனைவிமார்களை) எழுப்புங்கள். உலகத்தில் விசேஷமான ஆடைகளை யணியும் ஸ்திரீகள் மறு உலகத்தில் நிர்மாணமா யிருப்பதைப்போல் காணப்படுவார்கள்".

கினு அத்து என்னும் உள்ளதே போதுமென்ற நோக்கம், பெருந்தன்மை, பரிசுத்தம் முதலியவைகள் காரணமாய் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் சதகாவைப் பெறுவது ஹராமெனத் தீர்மானித்துவிட்டார்கள்.

ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒருசமயத்தில் சதகாவின் ஓர் பேரீச்சங்காயை யெடுத்து வாயில் போட்டுக்கொண்டார்கள். இதை நாயகமவர்கள் கண்டதும், "கஃ, கஃ, நம் குடும்பத்தார் சதகாவை உட்கொள்வதில்லை என்பது உங்களுக்குத் தெரியாதா?" என்று கூறி நாயகமவர்கள் ஹுஸைன்ரலியல்லாஹு அன்ஹுவை எச்சரித்தார்கள்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள், அலிரலியல்லாஹு அன்ஹு, பாத்திமாரலியல்லாஹு அன்ஹா இவர்களிடம் வந்து, "இரவில் நீங்கள் எழுந்திருந்து தஹஜ்ஜத் (என்னும் தொழுகையை) தொழுவதில்லையா ?" என்று கேட்டார்கள், இதற்கு அலிரலியல்லாஹு அன்ஹு அவர்கள் யாரசூலல்லாஹ் ! எங்கள் நித்திரையும் விழிப்பும் அல்லாஹுதஆலாவின் சம்மதத்தைப் பொருத்ததாக விருக்கின்றன. ஆகவே அவன் விழிக்கச் செய்வானுகில் நாங்கள் விழிப்போம்" என்று விடைபகர்ந்தார்கள். இவ்விடையைக் கேட்ட நாயகமவர்கள் மௌனமாயிருந்தார்கள். ஆயினும் நாயகமவர்கள் விசனமுற்றுத் தங்களின் துடையில் அடித்துக்கொண்டு, "மனிதர்கள் பெரும் வம்புக்காரர்களா யிருக்கின்றனர்." என்னுந் திருமறையை ஓதினுர்கள்.

ஒரு சமயத்தில் நாயகமாவர்களறிவித்ததாவது :—"ஒருவன் ஒரு சமூகத்தாரிடம் சென்று உங்களுடன் யுத்தஞ்செய்வதற்கு ஒருபடை வருவதை என் கண்களாற் பார்த்தேன், என்று நிர்மாணமாய்* நின்று எச்சரிப்பவனுக் கொப்பாகவே என்னையும் என் மார்க்கத்தையுங் கூறலாம். அவனுடைய வார்த்தைகளை நம்பினவர்கள் இரவிலேயே ஒளித்தோடி விடுவார்கள், நம்பாதவர்களோ அச்சைனியத்தால் அழிக்கப் படுவார்கள்" என்பதே.

மற்றொருசமயத்தில் நாயகமவர்கள் கூறியதாவது:—ஒருவன் மூட்டிய நெருப்பின் ஜ்வாலையானது நாலுபக்கங்களிலும் பரவியவுடன், அதில் பறந்து வந்து விழும் பூச்சிகளை அந்நெருப்பில் விழாவண்ணந் தடுப்பதற்குச் செய்யப்படும் முயற்சிகள் பலிதமடையாமல் அவைகள் நெருப்பில் வீழ்ந்து மாண்டுபோவதற் கொப்பாகவே என்னுடையவும், ஜனங்களினுடையவும் நிலைமை யிருந்து வருகின்றது. நீங்கள் நெருப்பில் வீழ்ந்து மடியாவண்ணம் யான் உங்களின் இடை

* ஆதிகாலத்தில் அரேபியாவில் அபாயகரமான சங்கதிகளை எச்சரிப்பவர்கள் நிர்மாணமாய் நின்றே எச்சரிப்பது வழக்கமாயிருந்தது.

களைப் பிடித்திழுக்கிறேன். ஆயினும் ஜனங்கள் நெருப்பில் குதித்து விடுகின்றனர்.

கொள்கை.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஜனனத்திற் குரிய லக்ஷியங்களுள் மிகப்பெரிதும் முக்கியமுமானதும், ஜனங்களின் கொள்கையைச் சீர்திருத்துவதே. கொள்கைகளுள் மிகக் கொடியது அல்லாஹுதஆலாவுக்கு "ஷிர்க்கு" என்னும் இணைவைத்தலே. அல்லாஹுத ஆலாவுக்கு இணைவைப்பதாகிய ஷிர்க்கை யொழிப்பதற் காகவே நாயகமவர்கள் ஜிஹாத் செய்தார்கள். ஜனங்களைக் காப்பாற்று வதற்காகச் செய்யப்படுவதுள் ஜிஹாத் ஒன்றே உச்சஸ்தானத்தைத் யுடையதாக விருக்கின்றது. அல்லாஹுத தலாவுக்கு இணைவைக் கக்கூடாதென்னும் பெரும் விஷயமட்டுமின்றி ஜனங்கள் யூகித்தறிய முடியாத கொள்கைகளும் பலவிருக்கின்றன. ஆயினுமவைகளைப் பொது ஜனங்கள் சிந்திக்கவோ அதற்காகக் காலத்தைக்கழிக்கவோ அனுமதியளிக்கப்படுமாயின் மதசம்மந்தமான கொள்கைகளில் பெருஞ் சங்கடமேற்பட்டுவிடும். அத்துடன் இஸ்லாமியக்கொள்கை சர்வ சாதாரணமான தென்னும் பெருமை பறந்துபோம். ஆதலின் அவசியமில்லாதவைகளில் காலத்தை விரயஞ்செய்யாததே முஸ்லிம் களின் குறிப்பான இலக்ஷணமென்று நாயகம்மவர்கள் தீர்மானித் தார்கள். அவசியமில்லாதவைகளில் ஜனங்கள் விவாதஞ் செய்யப் புகுவார்களாயின் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்ல மவர்கள் வெகுதீவிரமாய் அவர்களை பெச்சரித்து அவைகளை யகற்றி விடுவார் கள்.

உதாரணமாக:—

ஒரு சமயத்தில் சஹாபாக்கள் "கலாவகதர்" என்னும் மஸ் அலாவைப்பொருத்து விவாதஞ் செய்துகொண்டிருந்தார்கள். இவ் விவாதம் முஸ்லிம்களுள் இருபிரிவையுண்டு பண்ணிவிட்டது. இதை நாயகம் சல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் கண்டதும், கோபத் தினால் முகம் சிவந்து கூறியதாவது:—

"குர்ஆன்ஷரீபை உபயோகமற்றதாகச் செய்வதற்காகத்தானு நீங்கள் படைக்கப் பட்டிருக்கின்றீர்கள்? முற்காலத்திலிருந்த சமூகங் களை இத்தகைய வீண் விவாதங்களே பாழாக்கிவிட்டன." என்பதே.

இஸ்லாம் பிரகாசிப்பதற்குமுன் அரபுதேசத்திலிருந்த அறி வீனமான எல்லாக்கொள்கைகளையும் இஸ்லாம் மார்க்கம் போக்கிற்று.

ஆயினும் சிற்சில விஷயங்கள் மீதியாக விருந்தன. சிலசமயங்களில் அறிவீனமான பழையகொள்கைகள் நிகழ்ந்துவிடுவதுமுண்டு.

உதாரணமாக :—ஒரு பெரிய மனிதனிறந்து போனுல் சூரிய கிரஹண மேற்படுமென அரப்தேசத்து ஜனங்கள் எண்ணியிருந்தனர். நாயகமவர்களின் புத்திரர் இபுருஹீம் மரணமடைந்த தினத்தில் சூரியகிரஹண மேற்பட்டது. இக்கிரஹணமானது ஹஜ்ரத் இபுருஹீம் அவர்களின் மரணத்தை முன்னிட்டுத்தான் ஏற்பட்டிருப்பதாய் ஜனங்கள் நினைத்தார்கள். ஆதலின் நாயகமவர்கள் உடனே இவர்களுக்குச் செய்த எச்சரிக்கையாவது:—யாரேனும் மரணமடைந்ததற்காக அல்லது ஜனனமானதற்காக சூரியகிரஹணம் அல்லது சந்திர கிரஹணமேற் படுவதில்லை'' என்பதே.

வணக்கம்.

வணக்கங்கள் சதா ஒவ்வொரு நாளும் நடைபெற வேண்டியவையாகவிருக்கின்றன. இவைகளில் மறைதியும் தவறுதலும் ஏற்படுவது சகஜமே. ஆதலின் இவைகளைப் பாதுகாக்கும் பொருட்டு நாயகமவர்களுக்கு அநேக காரியங்களைச் செய்யவேண்டிய தவசியமாயிற்று. தொழுகையை நிறைவேற்றும் பொருட்டு இஸ்லாம் "ஜமா அத்தை" "வாஜிப்" என்னுங் கடமையாக்கிற்று. ஆயினும் பலர் இதில் கவனக்குறைவா யிருந்தனர். ஒரு சமயம் நாயகமவர்கள் ஜமா அத்திற்கு வந்த ஜனங்களிடையே சிலரைத் தேடியதில் அகப்படவில்லை. ஆதலின் நாயகமவர்கள் மிகவும் கோபமுற்றுக் கூறியதாவது:—"ஜமா அத்திற்கு யாரையாவது இமாமாக ஏற்படுத்திவிட்டு, வெளிச்சென்று நெருப்பை மூட்டி ஜமாஅத்திற்கு வராதவர்களை அந்நெருப்பில் தள்ளிவிடக் கருதுகிறேன்'' என்பதே.

சில இமாம்கள் தொழவைக்கும்போது தொழுகையில் அதிக நேரத்தை செலவு செய்பவர்களாயிருந்தனர். இதனுல் தொழில் செய்பவர்களுக்கும் பலஹீனமானவர்களுக்கும் சங்கடமேற்பட்டது. இதை முன்னிட்டே ஒருவர் நாயகமவர்கள் சமுகத்தில் இமாம்களின் மீது குறை கூறினுர். இதைச் செவியுற்ற நாயகமவர்களுக்குக் கோபமேற்பட்டு இமாம்களை நோக்கிக் கூறியதாவது:—

" நீங்கள் மதவிஷயத்தில் ஜனங்களுக்கு அருவருப்பேற் படும்படிச் செய்கின்றீர்கள். இமாம்கள் தொழுகையில் அதிக காலதாமதஞ் செய்யக்கூடாது. ஏனெனில் ஜனங்களுள் நோயாளிகள், பல

ஹீனமுள்ளவர்கள் முதலிய ஒவ்வொரு வகையினர்களு மிருப்பார்கள்." என்பதே.

தொழுகையின் முக்கிய நோக்கம் ஹிருதயத்துள் அல்லாஹுத ஆலாவின் அச்சத்தைக் கொள்வதாகும். தொழுகையின் நோக்கத்திற் குரிய இலக்ஷணங்களுக்கு விரோதமாய்த் தொழுபவர்களை நாயகமவர்கள் உடனே எச்சரிப்பவர்களா யிருந்தனர்.

உதாரணமாக:—ஒருவர் மிக தீவிரமாய்த் தொழுதார். அவர் தொழுகை முடிந்தவுடன் நாயகமவர்கள் அவரை நோக்கி, "நீர் தொழவேயில்லை. ஆதலின் மீண்டுந் தொழுவீராக" என்றறிவித்தார்கள். ஆகவே அவர் மீண்டும் மூன்றுதரம் அத்தொழுகையைத் தொழுதார். ஒவ்வொரு தடவையிலும் நாயகமவர்கள் அவரை மீண்டுந் தொழும்படியே ஆக்ஞாபித்தார்கள். அம்மனிதர் இதைவிட என்னால் உத்தமமாகத் தொழ முடியாதெனக் கூறினார். முடிவில் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள், தக்பீர், கிராஅத், ருகூஃ, சுஜூத், கியாம், குஊத் முதலியவைகளில் உத்தமமான முறைகளைச்செய்து அவருக்குக் காண்பித்தார்கள்.

வணக்கங்களில் செய்யப்படும் சிறு தவறுகளையும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். உதாரணமாக:—

நாயகமவர்கள் பிரயாணஞ்செய்து கொண்டிருந்த காலை அஸரின் தொழுகைக்கு நேரமானதும், சஹாபாக்கள் கால்களுக்கு மஸஃ செய்வதைத் தூரத்தில் கண்ட நாயகமவர்கள் உரத்துக் கூறியதாவது:— "குதிகால்களுக்கும் நெருப்பின் வேதனையுண்டு" என்பதே.

(தொடரும்)

ஜும்ஆவின் குத்பா.

தொழுகை மார்க்கத்தின் தூணாகவும், மதத்தின் அஸ்திவாரமாகவுமிருக்கின்றதென்பதை, குர் ஆன்ஷரீபையும், ஹதீது ஷரீபையும் உண்மையான முறையோடு வாசிப்பவர்கள் நன்கறிவார்கள்.

" என்னிடை மிக முக்கியமும் அவசியமுமான விஷயம் தொழுகையே. எவன் இதை விட்டுவிடுகிறானோ அவனின் எந்த நற்காரியங்களிலும் எனக்கு நம்பிக்கையில்லை," என்று ஹஜ்ரத் உமர்கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்களருளியிருக்கிறார்கள்.

குப்ருக்கும் இஸ்லாமுக்கும் இடையில் வித்தியாசத்தைக் காட்டக்கூடியது தொழுகைதானென கீர்த்திபெற்ற ஸஹாபாக்கள் கருதினார்கள். தொழுகையே மூமின்களின் மிஃராஜாகும். கண்களுக்கு குளிர்ச்சியளிப்பது தொழுகைதானென்னும் உண்மையை எவரும் மறுக்கமுடியாது.

தொழ மறுப்பவர்களின் இஸ்லாமை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லமவர்கள் அங்கீகரிக்கவில்லை. நாயகமவர்கள் தங்களின் ஜீவியகாலம் வரை தாங்களே இமாமாகவிருந்து தொழ வைத்திருக்கிறார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களுக்குப் பிறகு இவ்வரிய சேவையை குலபாயெராஷிதீன்கள் மிக்க கவனத்தோடு நிறைவேற்றி யிருக்கின்றார்கள். தொழுகை முக்கியமானதொரு கடமையென்பதற்கு மேலே வரையப்பட்டிருக்கும் திருஷ்டாந்தங்களே போதியனவாகும்.

தொழுகை மகா முக்கியமான கடமையென்பதோடு தொழுகைக்கு இமாமாகவிருக்கும் பாத்தியதை மனிதர்களுள் உத்தமமானவரையே சாருமென்பதும் விளங்குகின்றது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஜீவித்திருக்கும்வரை நாயகமவர்களைக் காட்டினும் கீர்த்திவாய்ந்தவர் எவருமில்லை யென்பது திண்ணம். ஆதலின் நாயகமவர்கள் தங்களின் ஜீவியகாலம் வரை தாங்களே தொழுகைக்கு இமாமாக விருந்தார்கள்.

நபிமார்களுக்குப் பின் மிகவும் கீர்த்திவாய்ந்தவர்கள் அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்தான் என்பது எல்லா சுன்னத்ஜமாஅத்துக்காரர்களின் தீர்மானமாக விருக்கின்றது. ஆதலின் நாயகமவர்களுக்குப் பிறகு அபூபக்கர் சித்தீக் ரலியல்லாஹு அன்ஹு அவர்களே தொழுகைக்கு இமாமாகவிருக்க அருகதை யுள்ளவர்களென்பதை ஹதீதுகளில் தெளிவாய் நிரூபிக்கப் பட்டிருக்கின்றது.

நம்முடைய மறைதி.

இஸ்லாமின் மிகப் பெருங் கடமையாகிய தொழுகை சம்மந்தமாய்ப் பல நூற்றாண்டுகளாக நாம் புரிந்துவரும் விபரீதமான செய்கையானது நம்முடைய துரதிர்ஷ்டத்தையும் மதப்பற்றின்மையும் எடுத்துக் காட்டுகின்றது. நம்முடைய கெட்டகாலங் காரணமாக முஸ்லிம்களிற் பெரும்பான்மையோர் தொழுகையை நிச்சயமாய் அலக்ஷியஞ் செய்துவிட்டனர். தொழுகையை நிறைவேற்றி வருபவர்கள் சிறுபான்மையினரே. இவர்களும் இருவகுப்பினர்களா யிருக்கின்றனர்.

ஒரு சாரார் தங்கள் தங்கள் இல்லங்களிலேயே தொழுதுகொள்வது போதுமென்றும், மஸ்ஜிதுகளுக்குப் போகவேண்டியது அவசியமில்லையென்றுங் கருதுகின்றனர். ஆகவே எளிய வகுப்பினர்களும் மிஸ்கீன்களும் அனாதைகளுமடங்கிய மற்றொரு சிறியவகுப்பினரின் மூலமாகத்தான் இன்று மஸ்ஜிதுகள் உயிர்ப்பித்திருக்கின்றன. இவ்வகுப்பில்லையாயின் மஸ்ஜிதுகளில் மனிதர்களைப் பார்ப்பதரிதாகிவிடும். இழிவான இந்நிலைமைக்குக் காரணம் மஸ்ஜிதுகளை நாம் அலட்சியஞ்செய்துவிட்டதேயன்றி வேறல்ல. இஸ்லாம் மார்க்கத்தின் தூரதிருஷ்டிக் கண்ணாடி மஸ்ஜிதுகளுக்கு அளித்திருந்த கீர்த்தியை நம்முடைய அறிவீனங்கள் பறித்துக்கொண்டன.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் அரியஜீவியகாலத்தில் மஸ்ஜித் தொழுகும் ஸ்தானமாகமட்டு மிருக்கவில்லை. மதசம்மந்தமான காரியங்கள்யாவும் செய்யவேண்டிய விடம் மஸ்ஜிதாகவேயிருந்தது. முஸ்லிம்கள் இன்று மஸ்ஜிதுகளை வைத்திருப்பதுபோல் நாயகமவர்கள் மஸ்ஜிதுகளை வைத்திருக்க வில்லையென்பது பிரத்தியக்ஷம். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மஸ்ஜிதில் தொழுதுகொண்டு மட்டுமிருக்கவில்லை. நிச்சயமாகவே ராஜீயம், தேசீயம், பொருளாதாரம், பொதுநன்மை, நீதி, நிர்வாகம் முதலிய காரியங்கள் முழுவதும் மஸ்ஜிதுகளிலேயே விவாதிக்கப்பட்டும் தீர்மானிக்கப் பட்டும் வந்தன. யுத்தம் சமாதானம் ஆகியவைகளைப் பற்றிய ஆலோசனை, சைனியங்களைத் திரட்டுவது, அவைகளை அனுப்புவது, யுத்தகருவிகளைச் சேர்ப்பது, யுத்தத்திற்குதவிபுரிவது, அந்நியதேசப்பிரதிநிதிகளுக்குப் பேட்டிகொடுப்பது, முஸ்லிமல்லாத பிரதிநிதிகள், விருந்தினர்கள் தங்குவது, தகராறுகளைத் தீர்ப்பது, சாக்ஷிகளை யழைப்பது, சாக்ஷியங்கூறுவது, தீர்ப்பளிப்பது யுத்தங்களிற் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சைசெய்வது முதலிய சகல காரியங்களும் "மஸ்ஜிதெநபவீ" என்றழைக்கப்படும் மஸ்ஜிதிலேயே நடத்தப்பட்டன.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் காலத்தில் மட்டுமின்றி குலபாயெராஷிதீன்களுடைய காலத்திலுங்கூட இவ்வெல்லாக் காரியங்களும் மஸ்ஜிதுகளிலேயே நடைபெற்றன. ஆயினும் நாம் மஸ்ஜிதுகளை ஐந்துநேரத்தின் தொழுகைக்காகமட்டும் சொந்தமாக்கி, மார்க்கத்தின் அடிப்படையான லக்ஷியங்களை யிழந்துவிட்டோம். ஆனது பற்றியே மஸ்ஜிதுகளில் இமாமத்து செய்வதை இழிவாகக் கொள்ளுகிறோம்.

முத்தகிகளைக் காட்டினும் அதிக கல்வி விளக்கமுள்ளவர்களையாவது, பக்தியுள்ளவர்களையாவது பரிசுத்தமான ஹிருதயங்களையுடையவர்களையாவது நாம் நம்முடைய மஸ்ஜிதுகளுக்கு இமாம்களாக்கவில்லை. உலக காரியங்களுக் குபயோகமில்லாத வெறும் சோம்பேறிகளைத் தேடிப்பிடித்து இமாம்களாக நியமிக்கின்றோம். இவர்களிற் பலர் புல்லறுக்கும் யோக்கியதையைக்கூடப் பெற்றிருக்கமாட்டார்கள். ஆதலின் இத்தகையினர்களை மிகவுங் குறைவான சம்பளத்திற்கு இமாம்களாக நியமித்துவிட்டதால் நம்முடைய கடமையெல்லாம் நிறைவேறிவிட்டதாக நிச்சயித்துக்கொள்ளுகிறோம்.

சோம்பேறிகளாகிய இந்த இமாம்களின்மீது நாம் என்ன நம்பிக்கையைக் கொள்ளக்கூடும்? இவர்களுள் சிலர் தாவீஸ், பலீத்தா மூலமாய் முஸ்லிம்களைப் பாழாக்க ஆரம்பித்து விட்டனர். இவர்கள், முஸ்லிம்களுக்கு குர்ஆன்ஷரீபிலும் ஹதீதுகளிலு மிருக்க வேண்டிய பற்றை நீக்கி இருளில் தள்ளி விடுகின்றனர். தாவீஸ் பலீத்தாவின் மூலமாய் பிழைப்பதற்குத் தகுந்த சூழ்ச்சியைச் செய்ய முடியாத மற்றொரு வகுப்பார் வீண்சடங்கையும், அருவருப்பான பித்அத்தையும் உண்டு பண்ணிவிட்டு, பொருள் சம்பாதிக்க முற்பட்டு விடுகின்றனர். இன்னுஞ் சிலர், இன்னாரிறந்து போகவேண்டுமென்று துஆச் செய்வார்கள். ஏனெனின் இறந்தவரின் வீட்டிலிருந்து நாற்பதாம் நாள்வரை இவர்களுக் கேதாவது கிடைத்துக் கொண்டிருப்பதே.

பணக்காரர்களின் வீட்டில் மரண மேற்படுந்தினமே சில இமாம்களின் வீட்டிற்கு கொண்டாட்ட தினமாக விருக்கும். இவ்வுண்மையை வெளியிட எவரும் முன் வரமாட்டார்கள், ஆயினும் இதை ஒருவரும் மறுக்கமுடியாது.

மஸ்ஜிதும் கூட்டமும்.

இஸ்லாம் மார்க்க ஆதாரப்படி மகா கீர்த்திவாய்ந்த ஸ்தானம் மஸ்ஜிதேயன்றி வேறில்லை. எந்த லக்ஷியத்தை முன்னிட்டு இன்று கான்பரன்சு, லீக், சங்கம் முதலியவைகள் அவசியமெனக் கருதப்படுகின்றனவோ, அவ் லக்ஷியங்களெல்லாம் மஸ்ஜிதுகளின் மூலமாகவே நிறைவேறி வந்தன.

இஸ்லாமையும், இஸ்லாமின் லக்ஷியங்களையும் நிலை நிறுத்துவதற்காக இஸ்லாம் மார்க்கம் ஏற்படுத்தியிருக்கும் ஒழுங்கான முறைகளை முஸ்லிம்கள் அறியாத்தனமா யிழந்துவிட்டனர். ஆதலின் முஸ்

லிம்கள் அளவற்ற க்ஷீணதெசைக்கு ஆளாகிவிட்டனர். அன்றியும் இந்த க்ஷீணதெசையின் முடிவை முஸ்லிம்கள் தெரிந்து கொள்ளக் கூடவுமில்லை.

ஜமா அத்தோடு தொழும் தொழுகையைத்தான் இஸ்லாம் (விசேஷமாக) மதிக்கின்றது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் சமூகத்தில் ஒரு அந்தகர் தான் பார்வை யிழந்திருப்பது காரணமாக மஸ்ஜிதுக்கு வந்து ஜமா அத்தோடு சேர்ந்து தொழுவதற்குப் பதிலாய் வீட்டில் தொழுதுகொள்ள அநுமதி வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார். அவரை மஸ்ஜிதுக்கு அழைத்து வர எவருமில்லாதிருந்துங் கூட அவர் வீட்டில் தொழ நாயகமவர்கள் அனுமதி யளிக்கவில்லை.

மஸ்ஜிது தொழுவதற்கு மட்டுமுள்ள ஸ்தானமல்ல. நிச்சயமாய் முஸ்லிம்களின் சகலகாரியங்களும் நடைபெறவேண்டிய ஸ்தானம் மஸ்ஜிதுதானென்பதை மீண்டும் கூறுகின்றோம். ஒவ்வொரு ஊர்களிலுமுள்ள மஸ்ஜிதுகளில் ஆங்காங்குள்ள முஸ்லிம்கள் ஒவ்வொருநாளும் ஐம்முறை தொழுவதற்காகக் கூடுகின்றார்கள். ஆகவே இக்கூட்டுறவால் ஒருவருக்கொருவர் அறிமுகமும் ஒற்றுமையுமேற்படுவதோடு, அநுதாபமும் ஆதரவும் வளர்ச்சிபெறக் கூடியதாக விருக்கின்றன. ஒருவருக்கேற்படும் சந்தோஷத்திலுந் துக்கத்திலும், இக்கூட்டுறவால் மற்றவர்களும் கலந்துகொள்ள முடியும். இஸ்லாமின் உன்னதமான பெரும் லக்ஷியமாகிய சகோதரத்து வமும் இக்கூட்டுறவால் வளர்ச்சி பெறக்கூடியதாக விருக்கின்றது.

முஸ்லிம்களுக்குள் ஏற்படும் மனஸ்தாபங்கள், தகராறு முதலியவைகளை யகற்றி ஒற்றுமையுண்டு பண்ணுவதற்கு இக் கூட்டுறவு இன்றியமையாததாகும்.

இவ்வரிய நோக்கங்கள் சித்திபெறும் ஸ்தானத்தையே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் மஸ்ஜிதெனக் கருதியிருந்தார்கள். இக்காரணத்தை முன்னிட்டே நாயகமவர்கள் மேலே வரையப்பெற்றிருக்கும் இஸ்லாமிய லக்ஷியங்களைப் பூர்த்தி செய்யத்தக்க ஆற்றல் படைத்தவர்களை மஸ்ஜிதுகளின் இமாம்களாக நியமித்து வந்தார்கள். நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் இச்செய்கையை ஆதாரமாக வைத்துக்கொண்டு நாம் வெகு அழுத்தமாய்க் கூறுவதென்ன வெனின்? "குர் ஆன்ஷரீபு ஹதீது ஆகியவைகளில் மட்டுமின்றி இஸ்லாமிய லக்ஷியம், ராஜீயம், தேசீயம், பொரு

ளாதாரம் முதலியவைகளிலும் ஞானமுள்ளவர்களையே நாம் நம்முடைய மஸ்ஜிதுகளுக்கு இமாம்களாக நியமித்தல் வேண்டும்.

லௌகீக வாழ்க்கையிலும் வைதீக வாழ்க்கையிலும் நிகழக்கூடிய சகல விஷயங்களிலும் முஸ்லிம்களுக்கு நேரான வழியைக் காட்டக் கூடிய அறிவும் ஞானமும் சக்தியுமுள்ளவர்களே மஸ்ஜிதுகளில் இமாமாக விருக்க அருகதையுடையவர்கள் என்பதை யெவரும் மறுக்க முடியாது. எவ்விஷயங்களிலும் மற்றவர்கள் கூறும் அபிப்பிராயங்களைக் காட்டினும் இமாம்களின் தீர்மானம் சிரேஷ்டமானதாக விருக்கவேண்டும். மதத்தலைவராக விருக்க சில கிதாபுகளைமட்டும் ஓதியிருத்தல் போதாது. மதத்தலைவர்கள் சகல விஷயங்களிலும் தேர்ச்சி பெற்றவர்களாயிருக்கவேண்டும். முஸ்லிம்களைக் காப்பாற்றி நல்வழியில் நடத்துவது இமாம்களின் முதற்கடமையாகும்.

ஜாமிஆமஸ்ஜிதும் மற்ற மஸ்ஜிதுகளும்.

தற்கால முறைப்படி பேசுவதை ஷரீஅத்து தடுக்காதிருக்குமாயின், ஜாமிஆமஸ்ஜிதுக்கும் மற்றுமுள்ள மஸ்ஜிதுகளுக்குமுள்ள சம்மந்தத்தை யூனிவர்ஸிடிக்கும் மற்ற ஸ்கூல்களுக்குமுள்ள சம்பந்தத்திற்கு ஒப்பிட்டுக்கூறலாம். எல்லா ஸ்கூல்களும் ஒரு யூனிவர்ஸிடிக்குட்பட்டு நடப்பதே போல் ஜாமிஆமஸ்ஜிதுக்கு ஏனைய மஸ்ஜிதுகள் உட்பட்டிருக்கின்றன. வாரத்திற் கொருமுறை ஜும்ஆவன்று பட்டினத்திலுள்ள சகல முஸ்லிம்களும் மற்ற மஸ்ஜிதுகளின் இமாம்களும் ஜாமிஆமஸ்ஜிதில் சேகரமாகின்றனர். ஜாமிஆமஸ்ஜிதின் இமாமுக்குள்ள கடமையும் மற்ற இமாம்களுக்குள்ள கடமையும் ஒன்றே. ஆயினும் பட்டினத்திலுள்ள எல்லா முஸ்லிம்களும் மற்ற மஸ்ஜிதுகளின் இமாம்களும் ஜாமிஆமஸ்ஜிதின் இமாமுடைய குத்பாவை (பிரசங்கத்தை)க் கேட்பதற்காகவே வருகின்றனர். சட்டப்படி ஒவ்வொரு பட்டினங்களிலும் ஒரே இடத்தில்தான் ஜும்ஆவைத் தொழக்கூடும். மிக அவசியமான சந்தர்ப்பத்திலுங் கூட புகஹாக்கள், ஒரு பட்டினத்தில் இரண்டிடத்தில் ஜும்ஆவைத் தொழ சாமான்னியமாய் அனுமதியளிக்கவில்லை. இரண்டிடத்தில் ஜும்ஆவைத் தொழ பலகண்டிப்பான நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஜும்ஆவன்று முதலாவதாக இமாம்கள் இரண்டு குத்பாக்களை (பிரசங்கங்களை) யோதவேண்டும். இது சம்மந்தமாய் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் பல தெளிவான சட்டங்களை யியற்றி யிருக்கின்றார்கள். இஸ்லாம் மார்க்கத்தில் குத்பா மகாபெரிய

காரியமாகும். இதன் மூலமகாவே மதசம்பந்தமான உத்தரவுகளும், ராஜீய சம்பந்தமான சட்டதிட்டங்களும் விளம்பரஞ் செய்யப்பட்டிருக்கின்றன. இக் குத்பாவிலேயே சென்றவாரத்தின் சம்பவங்களடங்கியிருக்கும். இதே குத்பாவில் நிகழ்காலத்தின் அபிப்பிராயங்களும் அடங்கியிருக்கும். இதிலேயே வருங்காலத்திற் குரிய தீர்மானங்களும் யோசனைகளும் பொதிந்திருக்கும். இதை முன்னிட்டே "அதானின்" சப்தத்தைக் கேட்டதும், உலகசம்மந்தமான சகலகாரியங்களையும் விட்டுவிட்டு மஸ்ஜிதுகளுக்கு விஜயமாகி, குத்பாவை (பிரசங்கத்தைக்) கேட்கும்படி இஸ்லாம் முஸ்லிம்களை கட்டாயப்படுத்துகிறது. இமாம் குத்பா ஓதப் புறப்பட்டுவிட்டால் தொழுகைமுதலிய சகலகாரியங்களும் நிறுத்தப்பட வேண்டுமென்று நாயகமவர்களருளியிருக்கின்றார்கள். இமாம் குத்பா ஓத ஆரம்பித்துவிட்டால், அதை மிக்க கவனத்தோடு கேட்டு உணர்ச்சிபெற வேண்டுமென்பதற்கவே நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் இவ்வெச்சரிக்கையைச் செய்திருக்கின்றார்கள் என்பது வெளிப்படை.

குத்பாவின் லக்ஷியம்.

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் ஜீவிய காலத்தை உற்று நோக்குவோமாயின், நாயகமவர்கள் ஒரே குத்பாவை இருமுறை ஓதவில்லையென்பது தெளிவாக விளங்கும். அவர்கள் ஒரு குத்பாவைப் பாராயணஞ் செய்துகொண்டு, அல்லது எழுதச்செய்து அதையே அடுத்தடுத்து ஓதிவந்தார்களெனக் கூறமுடியாது. நம்முடைய துரதிர்ஷ்டத்தின் பயனாக நாயகமவர்கள் செய்யாத முறையைப் பின்பற்றி குத்பா ஓதப்பட்டு வருகின்றது. நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் ஒவ்வொரு தடவையும் புதிதான குத்பாக்களையே ஓதிவந்தார்கள். சமயத்திற் கேற்ற பிரசங்கமே குத்பாவாகவிருந்தது. ஜிஹாதின் விளம்பரங்களும் இதே குத்பாவில் தான் செய்யப்படும். இதிலேயேதான் சந்தாவின் கோரிக்கையு மடங்கியிருக்கும். சைனியத்தில் சேரும்படி இதே குத்பாவின் மூலமாய் ஜனங்களை அழைக்கப்படும். மாரியில்லாததாலேற்பட்டிருந்த கஷ்ட நிஷ்டூரங்களை ஒரு அரபி குத்பாவின் மத்தியில் நாயகமவர்களிடம் முறையிட்டார். இதற்காக நாயகமவர்கள் மழை யாரம்பமாகும் வரை துஆச் செய்தார்கல்லவா?

நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களின் குத்பாவைப் போலவே குலபாயெராஷிதீன் களுடைய குத்பாவுமிருந்தது. இன்று

நாம் நம்முடைய அறிவீனங்காரணமாக இஸ்லாம் மார்க்கத்தைக் கை விட்டோம். கல்வி, அறிவு, ஞானம் முதலியவைகளில்லாதவர்களை இமாமாக ஏற்படுத்திக்கொண்டோம். இவர்கள், பலநூற்றாண்டுக ளுக்கு முன் எழுதப்பெற்றதும் அச்சடிக்கப்பட்டு கடைவீதிகளில் இரண்டணாவுக்கு விற்கப்படுவதுமான கிதாபுகளை வாங்கி அதில் வரை யப்பட்டிருக்கும் குத்பாவை யோதுவதைத் தவிர்த்து வேறொன்றையு மறியமாட்டார்கள். இக்கிதாபுகளில் அவசியமான விஷயங்கள் வரை யப்பட்டிருக்காது. அல்லாமலும் இவைகள் பிழையின்றி எழுதப்பெற் றனவாகவுமிருக்கா. இமாம்கள் அநேகமாய்க் கல்விப்பயிற்சியில்லாத வர்களாயிருப்பதால் அவர்கள் வெகு பாடுபட்டும், வழுவின்றி ஓதவுங் கூட சக்தியில்லாதிருக்கும் ஸ்திதியில் அதன் அர்த்தத்தைஅறிவதெங் ஙனம்? பொதுமக்களிற் பெரும்பான்மையோர் அரபிபாஷை தெரியா தவர்களாதலின், குத்பா ஓதும்போது ஜனங்கள் உறங்கி விழுகின்ற னர். சிலர் உறங்கி விழுவதினின்றும் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளு கின்றனர். இவர்கள் இதையே மதக்கட்டளையென நம்பியிருக்கின்ற னர்போலும்! அச்சடித்த புத்தகத்தினுதவியால் குத்பா ஓதுவது பெரும் கொடிய பித்அத் அல்லவா? இது நம்முடைய மடைமையின் பயனால் விளைந்த அருவருப்பாகும். இவ்வருவருப்பான காரியத்தை யகற்றிச் சீர்திருத்துவது ஒவ்வொரு சத்தியப் பிரசாரர்களினுடைய வும் கடமையாக விருக்கின்றது. குர் ஆனின் சிலஆயத்துகளை ஓதிவிடு வதால் மட்டும் குத்பாவின் லக்ஷியம் நிறைவேறி விட்டதாகக் கூற முடியாதென்பதை நாம் மேலே விளக்கிக் காட்டிவிட்டோம்.

குத்பாவில் குர்ஆனைமட்டும் ஓதுவதின்றி ஜனங்களுக்கு அதன் கருத்தை விளக்கிக் காட்ட வேண்டியதும் முக்கியமான காரியமாகும். குர்ஆன்ஷரீபு முழு உலகத்திற்கும் சதா அவசியமானதாக விருக்கும் ஸ்திதியில் அதைப் பொது ஜனங்களுக்கு விளக்கிக் காண்பிக்கத் தகுந்த முறையில் மஸ்ஜிதுகளின் இமாம்கள் குர் ஆன்ஷரீபை கற் றுக் கொள்வது முதற்கடமையாகும். குர் ஆன்ஷரீபு ஹதீதுஷரீபு முதலியவைகளின் அர்த்தத்தை ஜனங்களுக்கு அவரவர்களின் சுய பாஷையின் மூலமாய் விளக்கிக் காட்டாதவரை அன்னவர்கள் இஸ்லா மின் லக்ஷியத்தை அறிய முடியுமா? அரபிபாஷையில் மட்டும் குத்பா ஓதப்படுமாயின் முக்கியமான நன்மையை அடைவதெங்ஙனம்?

(இது மௌலானா காஜா அப்துல்ஹை அவர்கள் எழுதியது)

இஸ்லாமும் ஹபஷாவும்

(13-வது பக்கத் தொடர்ச்சி)

மக்கமா நகரைவிட்டு ஹபஷா தேசத்திற்குச் சென்றவர்களுள் ஒருவரான ஹஜ்ரத் உம்முஸல்மா அவர்கள் கூறியதாக இபுனுஹிஷாம் தன்னுடைய சீராவில் அடியில் வருமாறு வரைந்திருக்கிறார்கள்.

ஹஜ்ரத் உம்முஸல்மா அவர்கள் கூறியதாவது:—

நஜ்ஜாஷி அரசர் எங்களை மிகவும் பக்ஷமாக நடத்தினார். நாங்கள் எங்கள் மதக்கடமைகளை சுயேற்சையோடு நிறைவேற்றி வந்தோம். அன்றியும் வெகு சௌக்கியத்துடன் வாழ்ந்து வந்தோம். எங்களுக்கு விரோதமாகவுள்ள எவ்வார்த்தைகளையும் அவ்வரசர் செவியிலேற்றுக்கொள்ளார். எந்த விரோதிகளும் அத்தேசத்தில் எங்களுக்கு எவ்வித இடுக்கண்களையும் விளைவிக்க முடியாமலிருந்தது.

ஆயினும் நாங்கள் ஹபஷாதேசத்தில் அமைதியாகவும் சுகமாகவும் காலங்கழித்துவருவதைக் கண்ணுற்ற மக்காவின் முஷ்ரிக்குகள் எங்களுக்கு பலவித இன்னல்களை விளைவிக்க வேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டனர். ஆதலின் அவர்கள் ஹிஜாஸ் தேசத்திலுள்ள அரிய பொருள்களையெல்லாம் ஒவ்வொன்றாய்ச் சேகரஞ் செய்தனர். நஜ்ஜாஷி அரசருக்கு மட்டுமின்றி, ஹபஷாதேசத்தின் முக்கியஸ்தர்களுக்கும், பாதிரிகளுக்கும் சன்மானஞ் செய்யும்பொருட்டுப் பல நல்லபொருள்களை சேகரித்தனர். முழுதேசத்தையும் எங்களுக்கு விரோதமாகக் கிளப்பிவிடவேண்டுமென்ற கெட்ட எண்ணத்தை ஹிருதயத்துள்கொண்டவர்களாய் மக்காவின் முஷ்ரிக்குகள் இவ்வேற்பாட்டைச் செய்தனர்.

நஜ்ஜாஷி அரசருக்கும் மற்றுமுள்ள அத்தேசத்தின் முக்கியஸ்தர்களுக்கும் பாதிரிமார்களுக்கும் சன்மானஞ்செய்வதற்குகந்தவைகளெல்லாம் சேகரமானபின்னர், அப்துல்லாஹிபுனுரபீஆ "உம்ரிபுனுஆஸ்" ஆகியவர்களின் தலைமையின்கீழ் ஒரு தூதுவக்கூட்டம், சேகரமாகியுள்ள அரிய வெகுமதிகளுடன் ஹபஷாதேசத்தை அணுகிற்று.

இத்தூதுவக் கோஷ்டிக்கு மக்காவின் முஷ்ரிக்குகள் அது புறப்படுவதற்கு முன் அறிவித்ததாவது :—

"நீங்கள் ஹபஷா சென்று முதன் முதலாக நஜ்ஜாஷி அரசரைத் தரிசிக்கவேண்டாம். அவ்வரசர் நமக்கு விரோதமா யிருக்கக்கூடும்.

ஆதலின் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும் மதத் தலைவர்களையும் முதலாவதாகக் கண்டு பேசவேண்டும். இவர்களிடமே எவ்வித ஆலோசனையுஞ் செய்யவேண்டும். நஜ்ஜாஷி அரசர் நமக்கு விரோதமாயிருப்பதாகப் புலப்பட்டால் சில காலம் வரை அத்தேயத்தில் தங்கி, மதத்தலைவர்கள், பாதிரிமார்கள் முக்கியஸ்தர்கள் முதலிய ஒவ்வொருவர்களுக்கும் நல்ல வெகுமதியை யளித்து அவர்களை நமது பக்கந் திரும்பும்படிச் செய்துகொள்ளவேண்டும். இச்சூழ்ச்சிகள் முற்றுப்பெற்ற பின்னர் நஜ்ஜாஷி அரசரின் தர்பாருக்குச் செல்ல வேண்டும்.'' என்பதே.

தூதுவக்கோஷ்டியாருக்கு மக்காவின் முஷ்ரிக்குகள் அறிவித்தவாறே இவர்கள் வேலை செய்ய ஆரம்பித்தனர். இவர்கள் அத்தேசத்துப் பாதிரிமார்களையும் முக்கியஸ்தர்களையும் நோக்கிக் கூறியதாவது:—

“எங்கள் தேசத்தின் கீழ்ப்பட்டவர்களும், கொடியவர்களுமான சில இளஞ்சிறுர்கள் எங்கள் மதத்தைவிட்டு நீங்கிவிட்டார்கள். அன்றியும் உங்கள் மதத்தைக்கூட பின் பற்றினுர்களில்லை. நீங்களும் நாங்களுமறியாத ஒரு புதிய மதத்தை ஏற்படுத்தியிருக்கின்றனர். அவர்கள் மதத்தை யொட்டிக்கூறும் வார்த்தைகள் யாவும் நாம் கேள்விப்படாததாக விருக்கின்றன. அவர்கள் எங்கள் தேசத்திலிருந்து இத்தேசத்திற்கு ஓடிவந்து விட்டனர். இது விஷயமாக அரசரிடத்தில் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியதாக விருக்கின்றது. இக்கொடியவர்களை எங்களிடம் ஒப்புவித்து விடும்படி அரசருக்கு யோசனை சொல்ல வேண்டும்'' என்பதே.

இப்பிரசாரத்தின் மூலமாய் இத்தூதுவக்கோஷ்டியாருக்கு ஒருவித நம்பிக்கை யேற்பட்ட பிறகு இவர்கள் நஜ்ஜாஷி அரசரின் தர்பாருக்குச் சென்றனர். இவ்வரசரின் சந்நிதியில் தாங்கள் கொண்டு வந்த வெகுமதியைச் சமர்ப்பித்து மேலே கண்டுள்ள வார்த்தைகளைக் கூறியதோடு, “எங்கள் தேசத்திலிருந்து இங்கு ஓடிவந்திருப்பவர்களை எங்களிடம் தாங்கள் ஒப்புவித்து விடும் பொருட்டே எங்கள் தேசத்துப் பெரியார்கள் எங்களை யனுப்பியிருக்கிறுர்கள்'' என்றும் அறிவித்தார்கள்.

அத்தருணத்தில் தர்பாரிலிருந்த முக்கியஸ்தர்களும், மதத்தலைவர்களும், “தூதுவக் கோஷ்டியின் கோரிக்கை முற்றும் நியாயமாயிருக்கின்றது'' என்று தூதுவக் கோஷ்டிக்குச் சார்பாகப் பகர்ந்தார்கள். ஆயினும் இவைகளைச் செவியுற்ற நஜ்ஜாஷி அரசர் மிகவும் கோப

முற்று தன் தர்பாரிலுள்ளவர்களை நோக்கி, "நீங்கள் என்னிடங் கோருவதென்ன? என் தேசத்தில் அடைக்கலம் புகுந்திருப்பவர் களை விசாரணையின்றி இவர்களிடத்தில் ஒப்புவித்து விடவேண்டுமா? அடைக்கலம் புகுந்திருப்பவர்களை வரவழைத்து இவர்கள் முன்னிலே யில் விசாரிக்கின்றேன். இவர்கள் கூறுவது உண்மையாயின் (முஸ் லிம்களை) இவர்களிடம் ஒப்புவித்து விடலாம்" என்று கூறிய பின்பு முஸ்லிம்களைத் தர்பாருக்கு அழைத்து வரும்படி கட்டளையிட்டார். முஸ்லிம்கள் தர்பாரை நண்ணியவுடன் நஜ்ஜாஷி அரசர் முஸ்லிம்களை நோக்கி, "நீங்கள் பின்பற்றியிருக்கும் மார்க்கமென்ன? நீங்கள் உங் கள் மதத்தைக் கைவிட்டதுமன்றி எங்கள் மதமாகிய கிறிஸ்து மதத் தையும் பின்பற்றாத காரணமென்ன?" என்று கேட்டார்.

அரசரின் கேள்விக்கு விடையாக ஜஃபரிபுனு அபீ தாலிப் ரலி யல்லாஹு அன்ஹு அவர்கள் எழுந்து நின்று செய்த பிரசங்க மாவது:—

"ஓ அரசரே! நாங்கள் காட்டு மிராண்டிகளைப் போன்ற ஒரு சமூகமாக விருந்தோம். விக்கிரஹங்களை வணங்கிக் கொண்டும் மரித் துப் போனவைகளைப் புசித்தும் வந்தோம். பாவங்களில் மூழ்கிக்கிடந் தோம். அனுதாபமின்மையும் சூதாட்டமுமே எங்களின் தொழிலாக விருந்தது. எங்களுள் ஒவ்வொரு பலவந்தரும் பலமில்லாதவர்களை அழித்து விடுவதே எங்களிடை சிரேஷ்டமான காரியமாக விருந்தது.

நாங்கள் இவ்விழிவான நிலைமையிலிருந்தபோது அல்லாஹுத ஆலாவின் கிருபை எங்கள்மீது வருஷிக்கத் தொடங்கிற்று. அல்லா ஹுதஆலா ஒரு பரிசுத்தமான தூதரை எங்களினூடே அனுப்பி யிருக்கிறான். இத்தூதர் எங்கள் சமூகத்தின் ஓர் நபரே. வம்சம், பரிசுத்தம் நல்லொழுக்கம் முதலிய ஒவ்வொன்றிலும் இத்தூதர் உதா ரண மற்றவர்களென்பதை எங்கள் சமூகத்தினர் யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றார்கள். கீர்த்திவாய்ந்த இத்தூதர் எங்களை அல்லா ஹுத ஆலாவின் சமூகத்திற் கழைக்கின்றார்கள். அல்லாஹுத ஆலா ஒருவனென்றும், அவனுக்கே வணங்க வேண்டுமென்றும், அவனைத் தவிர மற்றவைகளை வணங்கக் கூடாதென்றும், அறிவீனங் காரண மாக நாங்களும் எங்கள் முன்னோர்களும், பூசித்துவந்த விக்கிரஹங் களை வணங்குவது பிசகென்றும் எங்களுக்குப் போதித்தார்கள். நல்லகாரியங்களைச் செய்யும்படிக் கட்டளையிட்டார்கள். உண்மையைக் கடைபிடித் தொழுகும்படி அறிவித்தார்கள். எவரிட மிருந்தாவது அமானிதம் பெற்றிருப்பீர்களாயின் அவற்றைத் திருப்பிக்கொடுத்து

விடுங்களென்றும் உறவினர்களின் பாத்தியத்தை மறந்து விடாதீர்களென்றும், அருகாமையில் வசிப்பவர்களுக்கு நன்மையைப் புரியுங்களென்றும், அருவருப்பான விலக்கப்பட்டவைகளைச் செய்யாதீர்களென்றும், மனிதர்களின் உதிரத்தைச் சிந்தவேண்டாமென்றும், கலகம், குழப்பம் முதலியவைகளை விட்டுக் காப்பாற்றிக் கொள்ளுங்களென்றும், அனாதைகளின் சொத்தைப் புசிக்கவேண்டாமென்றும், அல்லாஹுத ஆலாவை மட்டும் வணங்கவேண்டுமென்றும், ஐந்துநேரந் தொழவேண்டுமென்றும், தங்கள் தங்களின் பொருள்களில் ஏழைகளுக்கும் ஒரு பாகம் உண்டென்று கருதுங்களென்றும் இதேவிதமாக சகல கெடுதிகளையும் விட்டுத் தங்களைக் காப்பாற்றிக்கொள்வதோடு நற்காரியங்களைச் செய்வதற்காக இத்தூதர் எங்களை அழைப்பித்தார்கள்.

இத்தூதர்கொண்டு வந்திருக்கும் புதிய மார்க்கம் இதுவே. இந்நற்போதனையின் காரணமாகவே நாங்கள், தொன்றுதொட்டு அறியாமையின் பயனாக செய்துவந்த விக்கிரஹஆராதனையை விட்டொழித்தோம். இதற்காகவே எங்கள் சமூகத்தார் எங்கள் விரோதிகளாகி விட்டனர். இத்துடன் எங்கள்மீது அளவற்ற அநியாயங்களைப் புரிய ஆரம்பித்து விட்டனர். நாங்கள் உயிர்வாழ்ந்திருக்க முடியாதவர்களாய், ஆதரவற்று தேசத்தையுமிழக்கும்படி செய்து விட்டனர். இன்னமும் கவலையற்று நாங்கள் அல்லாஹுத ஆலாவை வணங்க விடுகிறார்களில்லை. ஓ ஹபஷாவின் அரசரே! விக்கிரஹ ஆராதனையைத் தவிர்த்து, வானம், பூமி, முதலியவைகளுக்குடையவனாகிய அல்லாஹுத ஆலாவை வணங்கியதற்குப் பழிவாங்கவே எங்களைக்கொண்டு போவதற்காக இங்கும் வந்து விட்டார்கள்."

ஹஜ்ரத் ஜஃபர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்தபோது அல்லாஹுத ஆலாவின் சத்தியமும் உண்மையும் அதனதன் வேலையைச் செய்துகொண்டேயிருந்தன. ஹஜ்ரத் அவர்களின் பிரசங்கத்தை ஆழ்ந்த சிந்தனையோடு கேட்டுக்கொண்டிருந்த நஜ்ஜாஷி அரசர் பிரமித்துப்போனார். பிரசங்கம் முடிந்தவுடன் அரசர் ஹஜ்ரத் அவர்களை நோக்கி, "உங்கள் நபிக்கு ஏதாவது வேதம் இறங்கியிருக்கின்றதா? அப்படியாயின் அவ்வேதத்திலிருந்து எதையாவது எங்களுக்கு ஓதிக்காட்ட முடியுமா?" என்று கேட்டார்.

ஹஜ்ரத் ஜஃபர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் "மரியம்" என்னும் சூராவை ஓத ஆரம்பித்தார்கள். இச்சூராவை செவியுற்றிருந்த நஜ்ஜாஷி மன்னர் பரவசமடைந்து "சந்தேகமின்றி! இவ்

வொளியும் மரியம்முடைய புத்திரர் மஸீஹின்மீது (அலைஹி மஸ்ஸ லாம்) ஜ்வொலித்த ஒளியைப்போலவேயிருக்கின்றது. இவ்விரண்டும் பரிசுத்தமான ஒரே பந்தத்திலிருந்து வெளியானவைகளாக விருக்கின்றன. அல்லாஹுதஆலாவின்மீது சத்தியமாக ஒரே நாயனை வணங்கும் இவர்களை, எவ்வகையிலும் அநியாயக்காரர்களான உங்களிடத்தில் ஒப்புவிக்கமாட்டேன். நீங்கள் உங்களுடைய விண்ணப்பத்தை எடுத்துக்கொண்டு போகலாம்.'' என்று அறிவித்தார்.

(தொடரும்)

மௌலானு அபுல்கலாம் ஆஜாத்தும், அல்கலாமும்.

(32-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

யாம்:—எங்கள் நாட்டில் மௌல்வி முஹம்மத் அலி எம். ஏ. அவர்களின் சிஷ்யர்கள் சிலரிருப்பதாகத் தெரிகின்றது. இச்சிஷ்யர்களுள் ஒருவர் பி. ஏ. தமிழ்பாஷையில் பாண்டித்தியமுள்ளவர்.

- - - -

ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் மரணமடைந்து விட்டதாக முஹம்மத் அலி. எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டிருக்கும் ஒரு புஸ்தகத்தையும் இவர் தமிழ் பாஷையில் மொழி பெயர்த்து அச்சிட்டு (இயேசுவின் இரகசியம்) வெளியிட்டிருக்கின்றார். இதன்மூலமாய் எங்கள் கிராமத்திற் கருகாமையிலுள்ள சக்கரா பள்ளியில் (அய்யம் பேட்டையில்) சிலர் இக்கெட்ட கொள்கைக்கிரையாயிருந்தனர். ஆயினும் அவ்வூரார்கள் கூடி, இவ்வழிகேடர்களை யழைத்து வந்து, உபதேசித்து, கடைசியாக இவர்களிடம் தௌபா நாமாவும் எழுதிவாங்கினார்கள். சபையோருக்கு "அல்கலாம்'' உதவியாக விருந்ததோடு நானொருசிறிய பிரசங்கமுஞ் செய்தேன்.

மௌலானா அவர்கள்:—இதற்காக நான் சந்தோஷப் படுகிறேன்.

யாம் :—திருச்சி மஜ்லிசுல் உலமாவின் மூன்றாவது மகாநாடு ஈரோட்டில் நடைபெற்றது. அம்மகாநாட்டிற்குத் தாங்களும் விஜயஞ்செய்திருந்தீர்கள். அச்சபையார் குர்ஆன் ஷரீபைத்தமிழில் மொழி பெயர்க்க ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

மௌலானா அவர்கள் :—மஜலிசுல் உலமாவின் இந்நடவடிக்கையை யான் பாராட்டுகின்றேன்.

யாம் :—தாங்கள் டில்லியை வாஸஸ்தல மாக்கிக்கொண்டு மீண்டும் " அல்ஹிலாலை " யாரம்பிக்கப் போவதாய்க் கேள்வியுற்றேன்.

மௌலானா அவர்கள் :—கல்கத்தாவில் வசிப்பது என்தேகத்துக் கொற்றுக் கொள்ளவில்லை யாதலின் யான் டில்லியில் வசிக்கவேண்டியதாக விருக்கின்றது. என்னாலியற்றப் பெற்ற பல முக்கியமான நூல்கள் இன்னும் முற்றுப் பெறுமலிருக்கின்றன. ஆகவே டில்லியிலிருந்துகொண்டு இந்நூல்கள் பூரணமடையும் மார்க்கத்தில் உழைக்க வெண்ணியிருக்கின்றேன். இவ்வூழியம் புரிவதோடு அல்ஹிலாலையும் வெளியிட முடியாது.

யாம் :—தாங்களியற்றிய குர்ஆன் ஷரீபின் மொழிபெயர்ப்பு சீக்கிரத்தில் பூர்த்தியாகிவிடுமா ?

மௌலானா அவர்கள்:—இன்ஷா அல்லாஹுத ஆலா, இதுவும், மற்றுமுள்ள முக்கியமான நூல்களும் கூடிய சீக்கிரம் வெளியாகலாம்.

யாம்:—பூரணமடையும் நூல் ஒவ்வொன்றும் எனக்குக்கிடைக்க வேண்டும்.

மௌலானா அவர்கள்:—அவ்வப்பொழுதே தொடர்ச்சியாக தங்களுக்கு வந்து சேரும்.

யாம்:—அல்கலாமுக்கு பலநண்பர்கள் தாமாகவே வெகு ஊக்கத்தோடு சந்தாதாரர்களைச் சேர்க்கின்றார்கள். உதாரணமாக ஒரு கனவான் தானும் தன்னிரு நண்பர்களும் அல்கலாமுக்கு நூறு சந்தா சேர்த்தனுப்புவதாய் வாக்களித்து கடிதமெழுதியிருந்தார். சந்தா சேர்ப்பதற்காக ஏற்படும் செலவுக்காக சந்தா ஒன்றுக்கு நான்கணு வீதம் செலவு செய்து கொள்ளலாமென்று நான் அக்கனவானுக்கெழுதினேன். அதற்கு அன்னவர், பணத்திற்காக வேலைசெய்யும் கோஷ்டியில் தங்களைச் சேர்த்துவிட வேண்டாமென்று எழுதியிருக்கிறார்.

மஸ்ஜிது மத்ரஸா, முதலிய பொது ஸ்தாபனங்களுக்கு " அல்கலாமை " இனாமாக அனுப்பும்பொருட்டு ஒரு நண்பர் ரூ. 55-ம், பொது நன்மையைக் கோறி பிரசாரம் புரியும் மௌல்விகளுக்கு " அல்கலாமை " இனாமாக அனுப்பி வரும்படி இரு நண்பர் ரூ. 60-ம், பணங்கொடுத்து அல்கலாமை வரவழைக்க முடியாமல் அல்கலாமுக்கு மூன்று சந்தா சேர்த்தனுப்பும் ஒவ்வொரு நேயர்களுக்கும் " அல்கலாமை" இனாமாக அனுப்பும்

படி மற்றொரு நண்பர் ரூ 30-ம் அனுப்பியிருக்கின்றார்கள். இவர்களுள் என்னுடன் பிறந்த சகோதரருமொருவர் என் பதைக் குறிப்பிட எனக்கு சந்தோஷமாக விருக்கின்றது. இதன் வளர்ச்சிக்குத் தாங்கள் துஆச் செய்யவேண்டுமாய்க் கோருகிறேன்.

மௌலானா அவர்கள்:— "அல்கலாமின்" ஊழியத்தை ஜனங்கள் மதிக்க ஆரம்பித்துவிட்டதாகத் தெரிகின்றது. இது அல்லாஹுத ஆலாவின் கிருபையே. தங்களுக்கும் தங்கள் சஹாக்களுக்கும் அல்லாஹுத ஆலா தௌபீக் செய்வானாக.

இச்சந்தர்ப்பத்தில் டாக்டர் மஹ்மூத் அவர்கள் விஜயஞ்செய்து மௌலானா அவர்களிடம் ஏதோ சம்பாஷித்தார்கள் இறுதியில் டாக்டர் மஹ்மூத் அவர்கள் என்னைச் சுட்டிக்காட்டி மௌலானா அவர்களிடம். "இந்நண்பரைத் தாங்கள் அறிவீர்களா? என்று கேட்டார்கள்.

மௌலானா அவர்கள் :—ஆம். அறிவேன்.

டாக்டர் மஹ்மூத் :—எவ்வளவு காலமாகத் தங்களுக்குத் தெரியும்?

மௌலானா அவர்கள் :—வெகுநாளாக.

டாக்டர் மஹ்மூத் :—காலத்தையறிந்து உண்மையாகவே நல்லமுறையோடு வேலைசெய்பவர் தமிழ்நாட்டில் இவர் ஒருவரே. இவரைக் காணுந்தோறும் எனக்குப் பெரும் சந்தோஷமேற்படுகின்றது.

மௌலானா அவர்கள் :—இதற்காக அல்லாஹுத ஆலாவுக்கு "ஷுக்ர்" செய்கிறேன்.

(டாக்டர் மஹ்மூத் அவர்கள் வெளிச்சென்றபின்)

யாம் :— தங்களைத் தரிசிப்பதற்காகத் தங்களின் அனுமதியை யெதிர்பார்த்து யாம் வெளியில் நின்றுகொண்டிருந்தபோது டாக்டர் மஹ்மூத் அவர்கள் மௌலானா ஷௌக்கத்அலி அவர்களிடத்திலும் என்னைப்பற்றி இதேவிதமாகக் கூறினார்கள். ஆகவே மௌலானா ஷௌக்கத்அலி அவர்கள் சந்தோஷமுற்று துஆச் செய்தார்கள். உண்மையில் யாம் ஏதாவது செய்திருந்தால் இதற்குக் காரணம் அல்ஹிலாலேயன்றி வேறில்லை.

மௌலானா அவர்கள்:—தங்களின் ஊழியத்தைப் பாராட்டுகிறேன்.....

(தொடரும்)

முஸ்லிம்களுக்கோர் எச்சரிக்கை.

அதோ தூரத்தில் வருவது சைனியமில்லையாயின் வானத்தை அளாவி நிற்கும் தூசிப்படலத்திற்குக் காரணமென்ன? இதோ கிடப்பது நெருப்பல்லவாயின் இப்புகை எங்கிருந்து உண்டாகின்றது? உலகில் ஏதும் துக்ககரமானவைகள் நிகழமாட்டா வென்று சொல்லப்படுமாயின் இக்கொடிய அநியாயங்கள் நடைபெறுவதேன்?

விவசாயி வானத்தைப் பார்த்துவிட்டு தானின்னது செய்ய வேண்டு மென்று தீர்மானித்து விடுவதையும், புயல்காற்று வருவதை முன்னறிந்து கப்பலோட்டி தன் கப்பலைக் கரைசேர்த்து விடுவதையும் நாம் பார்க்கவில்லையா?

இஸ்லாமிய உலகம் இன்று ஒரு நெருக்கடியான நிலைமையிலிருப்பதை முஸ்லிம்கள் உணரவில்லையா? ஒரு விவசாயியைப் போல தாங்கள் செய்யவேண்டியவை யின்னவென்று முஸ்லிம்கள் தீர்மானித்துக் கொள்ளவேண்டாமா? கப்பலோட்டியைப் போல் இஸ்லாமைக் காப்பாற்றுவதற்கானவைகளை உடனே முஸ்லிம்கள் செய்யமாட்டார்களா?

தூசிப்படலத்தைக் கண்டு சைனியம் வருவதையும், புகையின் மூலமாய் நெருப்பு இருப்பதையு மறிந்து கொள்வதுபோல், மேல் நாட்டார் இஸ்லாமுக்குச் செய்யும் அநியாயங்களை அறிந்து இஸ்லாமைக் காப்பாற்ற முஸ்லிம்கள் வெளிக்கிளம்பமாட்டார்களா?

நேற்றுவரை சிந்தனையிலிருந்த விஷயங்களை இன்று ஒவ்வொரு கண்களும் பார்க்கின்றன. வருங்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் குறிப்பிட்ட சில மூளைகளில் மட்டுமிருக்கலாம். ஆயினும் இன்று கிராமங்களிலுள்ள வயோதிகஸ்திரீகளும் அறியத் தொடங்கிவிட்டனர். நிகழக்கூடு மென்னும் அச்சமிருந்து வந்த பயங்கரமான சம்பவங்கள் இன்று ஒன்றின்பின் ஒன்றாக நிகழ்ந்து விட்டன. ஆகவே இதை அறிவதற்கு மூளை வேண்டுவதில்லை. சந்தேகமின்றி பார்ப்பதற்குக் கண்களே அவசியமானதாக விருக்கின்றன. உணருந்திறமை வாய்ந்த மூளை சந்தேகமின்றி மிகவுங் குறைவே. ஆயினுங் கண்களுக்குக் குறைவே கிடையாது. இஸ்லாமைக் காப்பாற்றுவதே முஸ்லிம்களின் முதற்கடமை என்பதை சாதாரண முஸ்லிம்களு மறிவார்கள். ஆகவே இஸ்லாம் நிலைத்திருக்க வேண்டுமாயின் ஒவ்வொரு முஸ்லிம்களும் அதற்கு ஊழியம் புரியவும் அவ்வூழியத்தில் உயிர் அர்ப்பணஞ் செய்யவும் சத்தியமிட்டுக் கொள்ளவேண்டும். அன்றி

யும் அதற்காக ஒரு பெரும் நிதியை சேகரிக்க பிரயத்தனங்கள் செய்யவேண்டும்.

இஸ்லாமைக் காப்பாற்றுவதற்காக ஊழியம் புரிவோர் தௌபாச் செய்தவர்களாயும் தன் பாவங்களை நினைத்து சதா கண்ணீர் சொரிபவர்களாயும் ஐந்து நேரமும் தொழுபவர்களாயு மிருப்பதோடு இவர்கள் அல்லாஹுதஆலாவுக்கும் அவனுடைய ரசூலுக்கும் அடிபணிந்தவர்களாயு மிருக்கவேண்டும்.

அல்லாஹுதஆலாவுக்கும் அவனுடைய ரசூலுக்கும் அடிபணிபவர்கள், அல்லாஹுதஆலாவின் நன்கொடைக்கு அருகதையுள்ள நான்குகூட்டத்தினர்களான, அன்பியாக்கள், ஸித்திக்கீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியவர்களைச் சாருவார்களெனக் குர்ஆன் ஷரீபில் வரையப்பட்டிருக்கின்றது. அல்லாஹுத ஆலாவுக்கும், அவனுடைய ரசூலுக்கும் அடிபணியும் பாக்கியத்தை யடைவதற்குள்ள நிபந்தனைகள் எவையென்பதையும், இப்பாக்கியத்திற்கு அருகதையுள்ளவர் யாரென்பதையும் முதலில் தெரிந்துகொள்ளவேண்டும்.

அல்லாஹுதஆலாவுக்கு அடிபணிய வேண்டுமானால், அல்லாஹ் அல்லாத மற்ற எச்சக்திகளுக்கும் அடிபணிவதில்லையென்ற தீர்மானத்தைச் செய்துகொள்ளவேண்டும். அல்லாஹுதஆலாவின் விசுவாசியாக வேண்டுமானால், அல்லாஹ் அல்லாதவைகளின் அவிசுவாசியாகவேண்டும். அல்லாஹுதஆலாவின் உத்தரவுகளுக்கு உண்மையாகவே கட்டுப்பட்டு நடக்கவேண்டுமானால், அல்லாஹ், அல்லாதவைகளின் உத்தரவுகளை அலக்ஷியஞ் செய்கிறவர்களாக விருத்தல்வேண்டும்.

"சைத்" இடத்தில் உங்களுக்கு விசுவாமிருக்கும் வரையில், சைதுடைய எல்லா எதிரிகளும், உங்களுடைய எதிரிகளாகும் என்பது மறக்க முடியாத உண்மையாகும். அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் தலைசாய்க்க வேண்டுமாயின், அல்லாஹ் அல்லாத மற்ற சமுகங்களின் மீது அருவருப்பேற்படவேண்டும். பிரகாசத்தை மட்டும் நேசிக்கும் பெருந்தன்மை யுங்களுக்குண்டாகி விட்டதாகக் கூறுவீர்களாயின் இருளை நீங்கள் அருவருப்பவர்களென்று ஒப்புக்கொண்டதாக ஏற்படும். அல்லாஹ் அல்லாத சமுகங்களை ஏறிட்டுப் பார்ப்பதில்லை யென்னும் உறுதி ஏற்படாத வரையில் அல்லாஹுத ஆலாவின் சமுகத்தை மட்டும் நோக்குகிறவர்களாக விருக்கமுடியாது.

அல்லாஹ் அல்லாத சம்மந்தத்தை அறுத்துக்கொள்ளாதவரை அல்லாஹுத ஆலாவின் சம்மந்தத்தைப் பெற்றவர்களெனக் கருத

முடியாது. ஆகவே அல்லாஹுதஆலாவையும் அவனுடைய ரசூலை யும் பின்பற்றியவர்களென்னும் கீர்த்தியைப் பெறப் பிரியமுள்ளோர், அல்லாஹ் அல்லாத எல்லாச் சக்திகளையும் முதலில் அவமதித்தாக வேண்டும். அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் தலையைச் சாய்ப்ப தற்கு முன் மற்ற சமுகங்களை நாம் இழிவானதெனக் கருதவேண் டும். அல்லாஹுதஆலாவினடிபணிபவர்களெனக் கூறுவோர் முதலில் அல்லாஹ் அல்லாத சக்திகளுக்கு அடிபணியாதவர்களென்ற குற்றத் திற்காளாயிருக்க வேண்டும்.

அல்லாஹுதஆலாவை விசுவாசிப்பவர்களெனக் கருதுவோர் முதலில் அல்லாஹ் அல்லாதவர்களை விசுவாசிக் காதவர்களென்ற குற்றவாளியாகவேண்டும். அல்லாஹுதஆலாவை நேசிப்பவர்க ளெனக் கூறுவோர், அவனல்லாதவைகளின் எதிரிகளென நிரூபிக்க வேண்டும். அல்லாஹுதஆலாவின் பிரீதியைப் பெறுவதற்கான மார்க்கத்தில், அல்லாஹ் அல்லாத சக்திகளாற் பல துன்பங்களை அனு பவித்திருக்கவேண்டும். அல்லாஹுதஆலாவின் சமுகத்திலுள்ள மனிதர்களை யிழுத்து ஷைத்தான்களை வணங்கும்படிச் செய்யும் ஷைத்தானிய சக்திக்குப் பகைவர் என்ற பட்டத்தைப் பெறாதவர்கள் அல்லாஹுதஆலாவின் சம்மந்தத்தைப் பெறமுடியாது.

அல்லாஹுதஆலாவின் சமுகத்திலிருப்பவர்களை யிழுத்து ஷைத்தான்களுக்குத் தலைசாய்க்கும்படிச் செய்யக்கூடிய சக்திகள் பல விருக்கின்றன. அச்சக்திகள் ஷைத்தான்களின் சிஷ்யராகி, அவை ஒவ்வொன்றும், மனிதனை ஷைத்தானுக்குத் தலைசாய்க்கும் படி வேலைசெய்கின்றன. ஐஸ்வரியமும், பணப்பெருக்கமும் உல கக்கீர்த்தியும் சில விடங்களிற் ஷைத்தான்களின் சைனியங்களாக விருக்கின்றன. கல்விப்பெருக்கமும் பெரும் பட்டங்களும் சில விடங் களில் ஷைத்தானின் சைனியமாக விருக்கின்றது. மதத்தலைவர்க ளென்ற நாமத்தைச் சூட்டிக்கொண்ட சின்னங்கள் சிலவிடங்களில் ஷைத்தான்களின் சைனியமாக விருக்கின்றது. கூட்டம், குடும்பம், ஊர் என்ற நாமங்களைப்பூண்ட சைனியங்களும் ஷைத்தான்களுக் குண்டு. அரசாங்கம், அதன் அதிகாரம், சட்டம் என்ற பெயர்களைத் தரித்த படைகளும் ஷைத்தான்களுக்குண்டு. உலகப்பற்று மனைவி மக்களின் பிரீதி என்றவகையிலும் பல விலங்குகள் ஷைத்தான்களிட மிருக்கின்றன.

ஆகவே அல்லாஹுதஆலாவையும் அவனுடைய ரசூலையும் பின்பற்றியவர்களென்னுங் கீர்த்தியைப் பெறுவதற்கு மேற்கூறப்

பட்டுள்ள ஷைத்தானிய சக்திகளின் கட்டை விட்டு நீங்கவேண்டியது முதற்கடமை யெனக்கூறவும் வேண்டுமோ? ஷைத்தான் களின்சக்திகள் எவ்வுருவத்தைக் கொண்டிருந்த போதிலும், தோற்றத்தில் எப்படிப் பட்டன வாயிருப்பினும், பய முறுத்துவதில் கீர்த்தி வாய்ந்தவை களாயிருந்தாலும் அவைகளுக்கு கிஞ்சிற்றும் அஞ்சாதவர்களா யிருக்க வேண்டும். அன்றியும் தனக்கு அல்லாஹுதஆலாவின் கிருபை யின் மூலமாய்க் கிடைக்குந்தைரியம், சக்தி, ஆதரவு முதலியவை களைக்கொண்டு ஷைத்தானிய சக்திகளுக்கு இறுதிக்கடித மனுப்பி அல்லாஹுதஆலாவின் வணக்கமென்னும் ஆயுதந்தாங்கி போர் புரிய முற்படவேண்டும். அசத்தியம், அநியாயம், எதேச்சாதிகாரம் வழி கேடு முதலிய ஸ்தாபனங்களை கண்டவிடமெல்லாம் சத்தியம், நியா யம், உண்மை என்னும் ஆயுதங்களால் அழிக்கவேண்டும்.

உலகத்தில் ஐஸ்வரியம், பணப்பெருக்கம் முதலியவை களுள்ள விடங்களே சதா ஷைத்தானின் இல்லமாக விருந்து வருகின்றது. வழிகேடு, அசத்தியம் ஆகிய வைகளினிருள் தங்கம், வெள்ளியின் சுவர்களிலேயே சதா தனக்கு இல்லத்தை அமைத்துக் கொள்ளு கிறது.

ஆகவே பணப் பெருக்கத்தையும், உலக சம்மந்தமான கீர்த்தி யையும் அஸ்திவாரமாகக் கொண்டு வெளியாகும் படாடோபங்கள் ஒவ் வொன்றும் ஷைத்தானின் விக்கிரஹங்களெனத் தீர்மானித்துக் கொள் ளவேண்டும். அல்லாஹுத ஆலாவின் அரசாங்கத்தை நிலைநிறுத்து வதற்காக இவ்விக்கிரஹங்களை யுதைத்துத்தள்ளி நாச மாக்கவேண் டும். அரசாங்கத்தின் எதேச்சாதிகாரம், கெட்ட உலமாக்களின் செல்வாக்கு, அல்லாஹ் அல்லாதவைகளைப் பூசிக்கும் மதத்தலைவர், உலகத்தை யொட்டியதலைவர், அதிகார வர்க்கத்தாரின் சட்டதிட்டங் கள், கூட்டம் குடும்பங்களின் பழக்க வழக்கம் சடங்கு சாங்கியம் முதலியவைகள் ஒவ்வொன்றும் ஷைத்தானுடைய சிம்மாசனத்தின் ஆதரவால் வளர்ச்சி பெறக்கூடியன வாகவிருப்பதால், அல்லாஹுத ஆலாவின் பிரீதியைப் பெறுவதற்கு மேற்கூறப்பட்டவைகளின் விரோதியாக வேண்டும். அல்லாஹுதஆலாவின் கீர்த்தியை முன் னிட்டு அவனுக்கெதிரியாக வுள்ளவைகளை இழிவுபடுத்தவேண்டும். அல்லாஹுதஆலாவின் சட்டவரம்புக்கு விரோதமாய் சத்தியம் நியாயம், உண்மை, தர்மம் முதலியவைகளை அழித்துக் கொண் டிருக்கும் சக்திகள் எப்படிப்பட்டனவாயினும் அவைகளை யொழிப்பதற்குத் தந்நாவன்மை, மூளைத்திறம் முதலிய சக்திகள்

ஒவ்வொன்றையும் அர்ப்பணஞ் செய்யவேண்டும். தன்னுடைய நாவை உண்மைக்குழைக்கும் நாவாகவும் தன் கால்கள் உண்மைக்காக நடப்பவைகளாகவு மாக்கிக்கொள்ளல் வேண்டும். அசத்தியத்தின் சக்திகளை தந்நாவால் இழிவுபடுத்திக் கூறவேண்டும். அநியாயத்தின் சிரசைத் தன் கால்களால் உதைத்துத் தள்ளவேண்டும். இந்நிபந்தனைகளின்படி நடந்துகொண்டவர்கள். தான் அல்லாஹு தஆலாவுக்கும் அவனுடைய ரசூலுக்கும் அடிபணிந்தவர்களெனத் திண்ணமாய்க் கூறலாம்.

நியமத்துல்லாகான்.

ஆப்கன் தேசவாசியாகிய மௌலவி நியமத்துல்லாகான் காதியானிக் கொள்கைக் கிரையாகி காதியானுக்கு வந்து சிலகாலம் அங்கு வாசஞ்செய்து தனக்கு வேண்டியவைகளைப் பயின்ற பின்னர் ஆப்கனை யடைந்தார். இவர் ஆப்கனுக்குச் சென்றபோது அரசாங்கத்திற்கு விரோதமாக, "கோஸ்த்து" கலகம் நடந்து கொண்டிருந்தது. இக் கலகத்துக்குக் காரணம் கோஸ்த்துக்காரர்களின் அறியாமை மட்டுமின்றி அன்னியர்களின் தூண்டுகோலும் ஒரு காரணமாக விருந்தது. இக்கலகக் காரர்களின் தலைவர் அப்துல்கரீம் என்பதை நேயர்களறிவார்கள்.

இக்கலகக்கார தலைவருக்கும் நியமத்துல்லாகானுக்கும் சம்மந்தமுண்டு என்பதாய் அறிவிக்கப்பட்டது. இதுவுமன்னியில் இவர் ஆப்கன் பிரஜைகளினூடே காதியானிக் கொள்கையைப் பிரசாரஞ் செய்துகொண்டுமிருந்தார். இச்செய்திகளையறிந்த அரசாங்கத்தார் நியமத்துல்லாகானைக் கைதுசெய்து, நியாயஸ்தலங்களில் விசாரணை நடத்தி உலமாக்களின் தீர்மானப்படிக் கொன்று விட்டார்களென்பது உலகமறிந்ததே.

நியமத்துல்லாகானைக் கொன்றதற்கு மதசம்மந்தமான விஷய மட்டுமின்றி, ராஜீய விஷயங்களுமுண்டென்பதை எவராலும் மறுக்க வியலுமா? காதியானிக் கொள்கையைத் தழுவிக்கொண்டவர்களிற் பலர் ஆப்கனிலிருப்பதாகச் சாற்றும் அஹ்மதியாக்களே, நியமத்துல்லாகானை மட்டுங்கொன்று மற்ற காதியானிகளை விட்டு வைத்திருப்பதற்குச் சமாதானங் கூறவேண்டாமா?

நியமத்துல்லகான், மிர்ஸாகுலாம் அஹ்மத் காதியானியின் புதல்வரைப் பின்பற்றியவரென்று அஹ்மதியாக்கள் மொழிகின்றனர்.

மிர்ஸா சாஹிபை "நபி" என்று ஒப்புக்கொள்ளாதவர்கள் காபரென்பதும் இவர்களின் கொள்கையென்பதை உலகமறியாதா?

வாளாயுதந் தாங்கி ஜிஹாத் செய்வதை தான் ரத்து செய்துவிட்டதாக மிர்ஸாகுலாம் அஹ்மத் சாஹிப் கூறியிருப்பதை எவரும் மறைக்க முடியுமா? மிர்ஸாகுலாம் அஹ்மத்ஸாஹிப் நபி என்னும் கொள்கையை யுடையவர்களின் பிரசாரத்தால் ஆப்கன் அரசாங்கத்திற்குப்பெரும் நஷ்டமேற்படாமலிருக்கமுடியுமா? ஆங்கிலேயர்களிடத்தில் விசுவாசம் வைக்கவேண்டியது கடமையென்பதும் காதியானிகளின் கொள்கையாக விருக்கும் ஸ்திதியில் இவர்களின் பிரசாரத்தை ஆப்கன் அரசாங்கம் கவனிக்காமலிருப்பது சாத்தியமா?

கிலாபத்தியக்கத்தின்போது காதியானிகள் மகா பெரும் மௌனவிரதம் பூண்டிருந்தார்க ளல்லவா? முஸ்லிம்களின் கஷ்ட நஷ்டத்தை முன்னிட்டு அனுதாபப் படுவதற்குப் பதிலாக இவர்கள் முஸ்லிம்களை ஏளனஞ்செய்து கொண்டிருக்க வில்லையா? ஆங்கிலேயர்களை "உலுல் அம்ர்" என்றுகாட்டி இந்தியமுஸ்லிம்கள் எவ்வகையிலும் ஆங்கிலேயர்களுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வது கடமையென்று இவ்வகுப்பார் தீர்மானிக்கவில்லையா? இத்தகைய தீர்மானத்தைச் செய்த மகான்கள் இன்று ஆப்கன் அரசாங்கத்தின்மீது குற்றஞ் சாட்ட நியாயமிருக்கின்றதா?

நியமத்துல்லாகான் ஆப்கனின் பிரஜை என்ற முறையில் அத்தேசத்தின் "உலுல் அம்ர்" ஆகிய அமீரின் எத்தகைய தீர்மானத்திற்கும் கட்டுப்பட வேண்டியது நியமத்துல்லாகானின் மீது கடமையாக விருக்கும் ஸ்திதியிலும், இதை முன்னிட்டு ஆப்கனிலுள்ள அஹ்மதியாக்கள் மௌனஞ் சாதிக்கவேண்டியது கடமையாக விருக்கின்ற ஸ்திதியிலும் ஆப்கனுக்கு வெளியில் வசிப்பவர்கள் ஏன் ஆத்திரப்படவேண்டும்?

நியமத்துல்லாகான் கொல்லப்பட்டார் என்ற செய்தி யெட்டியதும், ஆப்கன் அரசாங்கத்தார் அவரைக் கொன்றதற்குக் காரணமென்னவென்று விசாரிக்காமலேயே அமீர் அவர்களைக் கண்டித்தும் நிந்தித்தும், அஹ்மதியாக்களின் ஒவ்வொரு சபையும் தீர்மானங்களை நிறைவேற்றிப் பத்திரிகைகளில் பிரசுரித்ததோடு, இப்பிரதிகளை அமீர் அவர்களின் சமூகத்திற்கும் அனுப்பின. அஹ்மதியாக்கள் இம்மட்டோடு நின்றிருந்தால் முஸ்லிம்களினிடையே நிகழ்ந்த விவாதமென்று கூறி மற்றவர்கள் ஒதுங்கி நிற்கக்கூடும். ஆயினும் மிர்ஸா சாஹிபின் புத்திரர் அவர்கள் ஆப்கன் அரசாங்கத்தின் செய்கையைக்

கண்டித்து மேல்நாட்டு வல்லரசர்களுக்கும், சர்வதேச சங்கத்திற்கும், இந்தியாவின் வைஸ்ராய்க்கும் தந்திகொடுத்ததை எந்த உண்மை முஸ்லிமும் கண்டிக்காமலிருக்க முடியாது. இந்நிலைமையில் ஆப்கன் அரசாங்கத்திற்கு ஏதும் ஆபத்துகள் நிகழாவண்ணம் வேலை செய்ய முஸ்லிம்கள் கடமைப் பட்டிருக்கிறார்க ளல்லவா?

மஜ்லிசுல் உலமா. நான்காவது மகா நாடு.

திருநெல்வேலிப் பேட்டையில் நடைபெறும்.

1925-ம் ஷு ஜனவரி மீ 14உ புதன்கிழமையன்று காலை 11-மணிக்கு திருச்சி மஜ்லிசுல் உலமா தோட்டத்தில், ஜனாப் மௌலானா மௌல்வி ஹாஜி ப. செ. முகம்மது மதார் ஆலிம் ஸாஹிப் அவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நிர்வாகசபை மீட்டிங்கு கூடிமூன்று தீர்மானங்களை நிறை வேற்றியது.

தீர்மானங்களின் சாராம்சம்.

(1) திருநெல்வேலிப்பேட்டை ஜமாஅத்தார்களின் கோரிக்கைப் படி மஜ்லிசுல் உலமா நான்காவது கான்பரன்ஸை ஜூன் மீ 6, 7உ களில் பேட்டையில் நடத்த ஒப்புக் கொள்வதோடு, கூடுமானால் மேற் கண்ட தேதிகளுக்கு ஒன்று அல்லது இரண்டு வாரத்திற்குப் பிற்பட்டு கான்பரன்ஸை வைத்துக் கொள்ளலாமென அனுமதிக்கப் பட்டது.

(2) மேற்கூறியுள்ள கான்பரன்சுக்கு மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களை அக்கிராசனராக நியமிக்க வேண்டுமென்றும், அவர்கள் வர சௌகர்யப்படாவிடின் மௌலானா ஷாஹ்சுலைமான் புல்வாரி அவர்களை நியமிக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்களின் நாமத்தை அல்கலாமின் ஆசிரியர் ஜனாப் கூ. அ. அப்துல் மஜீத்சாஹிப் அவர்களும், மௌலானா ஷாஹ்சுலைமான் சாஹிப் புல்வாரி அவர்களின் நாமத்தை ஜனாப்ஹாஜி மு. ஜ. ஜமால் முகம்மதுசாஹிப் அவர்களும் பிரேரித்தார்கள்.

(3) பிரதி மீட்டிங்குகளிலும் நிறைவேறுந் தீர்மானங்களையும், மஜ்லிஸின் நடவடிக்கைகளேம் அச்சிட்டு அங்கத்தினர்களுக்கனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

முதலில் இந்தியனா? அல்லது முஸ்லிமா?

"ஜசீரத்துல் அரபை மீட்பது சம்மந்தமான சிந்தனையை விடுத்து முஸ்லிம்கள் இந்தியாவின் சுயேச்சைக்காக வேலைசெய்யவேண்டும்," என்றும், "ஜசீரத்துல் அரபுக்குதவிபுரிவதை நிறுத்திவிட்டு இந்தியாவுக்குதவி செய்யவேண்டுமென்ற எண்ணத்தை முஸ்லிம்கள் கொள்ளவேண்டும்," என்றும் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கூறியதாக ஒரு இந்து நண்பர் சந்தோஷமுற்று பிரசுரித்திருக்கின்றார்.

மௌலானா அவர்களின் வார்த்தைகள் அவர்களின் கருத்தை உள்ளங்கை நெல்லிக்கனியென தெளிவாக விளக்கிக் காட்டுகின்றன வாயினும் சிலர் ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் தப்பான கருத்துகளையே கொள்ளுகின்றனர். கோடிக்கணக்கான முஸ்லிம்களின் பக்திக்குரிய நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்களடங்கியிருக்கும் தேசமாகிய ஜசீரத்துல் அரபைக் காட்டினும் இந்தியா சிரேஷ்டமானதென்னும் கருத்தைக் கொடுக்கத் தக்க வார்த்தைகளைக் கூற மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் ஒருபோதும் துணியமாட்டார்கள்.

தற்கால நிலைமையை நோக்குவோமாயின், ஜசீரத்துல் அரபின் மீட்சிக்காக வேலை செய்வதை விட முதன் முதலாக இந்தியாவின் விடுதலைக்கு வேலை செய்யவேண்டும். ஏனெனில்? ஜசீரத்துல் அரபை அடிமையாக்குவதும் இந்தியாவாகவிருப்பதால் ஜசீரத்துல் அரபின் விடுதலைக்காக முதலில் இந்தியா விடுதலையாக வேண்டுமென்பதே மௌலானா அவர்கள் இந்து நண்பரிடம் கூறியதாகச் சொல்லப்படும் பிரஸ்தாப வார்த்தைகளின் உண்மையான கருத்தென்பதை முஸ்லிம்கள் உணரவேண்டும். இந்நிலைமையில் "தாருல் இஸ்லாம்" முதலில் இந்தியன் பிறகு முஸ்லிம் என்ற தலைப்பின் கீழ் "சில தினங்களுக்கு முன் மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் இந்தியாவின் விடுதலையைப்பற்றி அபிப்பிராயங் கூறியபோது, ஒவ்வோர் இந்திய முஸ்லிமும் முதலில் இந்தியராயும் பிறகே முஸ்லிமாயும் இருக்க வேண்டுமென்னும் எமது கருத்தையே யமைத்துக் கூறியிருக்கின்றார்கள். இந்திய முஸ்லிம்கள் ஜஸீரத்துல் அரபைக் காக்கும் பொருட்டு பாடு படுவதற்கு முன் இந்தியாவின் விடுதலைக்காகவே பாடுபடவேண்டுமென்று கூறியிருக்கிறார். இதுதான் எம்முடைய நோக்கமும்" என்று வரைந்திருப்பதைப் பார்க்க நமக்குப் பெரும் வருத்த மேற்படுகின்றது.

மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் மீது வீண்பழி சுமத்தப் படுகின்றது.

மௌலானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் நாகபுரியிலிருந்து கல் கத்தாவுக்குத் திரும்பி வந்ததும் பெர்வெர்டு பத்திரிகையின் பிரதிநிதி மௌலானா அவர்களை தெரிசித்து நாகபுரியில் இந்து முஸ்லிம்களுக் குள்ளேற்பட்டிருக்கும் ஒற்றுமையைப்பற்றியும், இதை யொட்டி அஸோஸியேட்டட் பிரஸ் விடுத்துள்ள தந்தியைப்பற்றியும் கேட்ட கேள்விக்கு மௌலானா அவர்கள் அளித்த விடை வருமாறு:—

“நாகபுரி இந்து முஸ்லிம் ஒற்றுமை சம்மந்தமாக அஸோஸி யேட்டட் பிரஸ் வெளியிட்டுள்ள தந்தியைப் பார்த்தேன். அத்தந்தி திருப்தி யற்றதாயும், செய்தியைச் செவ்வனே வெளியிடக் கூடாததா யுமிருக்கின்றது. பழைய வழக்கப்படி மஸ்ஜிதுகளுக்கு முன்னால் மேளம் நிறுத்தப்படவேண்டுமென்று முஸ்லிம்களும், மேள கோஷங் களை நிறுத்த முடியாதென்று இந்துக்களும் விவாதஞ்செய்து கொண் டிருந்தனர். இவ்விரு சாரர்களின் பாத்தியதைகளை விசாரித்து ஒரு வித முடிவு செய்வதற்காக நானும் மோதிலால் நேருவும் அழைக்கப் பட்டிருந்தபடியால் நாங்களிருவரும் நாகபுரிக்குச் சென்றோம்.

நாங்கள் நாகபுரியையணுகியவுடன் முஸ்லிம்கள் தங்களின் பாத்தி யதையை நிரூபிப்பதற்குப் பதிலாக இதை இந்து சகோதரர்களின் தீர்மானத்திற்கே விட்டுவிடுவதென்று அவ்வூர் முஸ்லிம் தலைவர்கள் முடிவுசெய்திருப்பதாகத் தெரிந்து சந்தோஷமடைந்தோம்.

தொன்று தொட்டு பள்ளிவாசல்களுக்குமுன் மேளத்தை நிறுத் தல் வேண்டுமென்ற முறை அமுலிலிருந்து வருவதாக முஸ்லிம்கள் கூறுகிறார்களாயினும், தங்கள் பாத்தியதையை வற்புறுத்தவோ, அல் லது பள்ளிவாசலுக்கு முன் மேளமடிப்பதை யொட்டி இனி ஆக்ஷே பிக்கவோ முஸ்லிம்கள் தயாராயில்லை என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்து விட்டார்கள்.

ஆகவே முஸ்லிம்கள் காட்டிய இப்பெருந்தன்மையும் வீரமும் எங்கள் சிரமத்தைக்குறைத்துவிட்டன. இந்நிலைமையில் நாங்கள் சட்ட சம்மந்தமான தீர்மானத்தைச் செய்யவேண்டியது அனுவசிய மாயிற்று.

முஸ்லிம்கள், தங்கள் பாத்தியதையை வற்புறுத்துவதில்லை யென்று தாங்களே முடிவு செய்துவிட்ட ஸ்திதியில் இந்துக்கள் இதற்கு அளிக்கும் விடை யென்ன வென்று நாங்களிருவரும் இந்து தலைவர்களைக்கேட்டோம். இதற்கு அவர்கள், "பள்ளிவாசல்களுக்கு முன் மேளமடிப்பதை முஸ்லிம்கள் ஆக்ஷேபிக்க மாட்டார்களாயினும், நாகபுரியின் எந்த பெரிய பள்ளிவாசல்களுக்கு முன்னும், "லுஹர்," "இஷா" ஆகிய இவ்விரண்டு தொழுகையின் நேரங்களில் மேளமடித்துக்கொண்டு எந்த ஊர்வலமும் செல்லாதென்பதை முஸ்லிம்கள் நம்ப வேண்டுமாய் நாங்கள் வெகு சந்தோஷத்தோடு அறிவிக்கின்றோம். பூர்வ காலந்தொட்டு நாகப்பூர் அரசர்களுடைய தலைமையின் கீழ் நடத்தப்பட்டுவந்த சில குறிப்பான ஊர்வலங்கள் தவிர மற்ற ஊர் வலங்களின் மேளத்தை நிறுத்தப்படும்" என்றுகூறினார்கள்.

(டெல்லியில் நடைபெற்ற) ஒற்றுமை மகாநாடு, பள்ளிவாசலுக்கு முன் மேளமடிப்பதைத் தடுக்கவேண்டாமென்று முஸ்லிம்களையும், முஸ்லிம்களின் வணக்கத்திற்கு இடையூறுண்டுபண்ண வேண்டாமென்று இந்துக்களையும் கேட்டுக்கொள்ளுவதாய்ச் செய்திருக்கும் தீர்மானத்தை இச்சந்தர்ப்பத்தில் இந்து தலைவர்களுக்கு அறிவிக்க வேண்டியது எங்கள் கடமையென நினைத்து, ஒற்றுமை மகா நாட்டின் தீர்மானத்தை யெடுத்துக் காட்டி "லுஹர்," "இஷா" என்னும் இரண்டு தொழுகை நேரங்களில் சிலமஸ்ஜிதுகளுக்கு முன்னால் மேளத்தை நிறுத்துவது என்னும் நோக்கத்தை விட்டு, எல்லா மஸ்ஜிதுகளுக்கு முன்னும், தொழுகையின் ஐந்து நேரங்களிலும் மேளத்தை நிறுத்தி ஒற்றுமை மகா நாட்டின் வேண்டுகோளைக் கௌரவிக்குமாறு நாங்கள் இந்து தலைவர்களைக் கேட்டுக் கொண்டோம்.

மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மேற்கூறிய எல்லா விஷயங்களையும் விவரமாகவும் தெளிவாகவும் எடுத்துரைத்தோம். முஸ்லிம் சகோதரர்கள் காட்டிய பெருந்தன்மைக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு இந்து சகோதரர்களும் தங்களின் பெருந்தன்மையை நிரூபித்துவிடுவார்களென்ற நம்பிக்கையை முஸ்லிம்கள் கொண்டிருக்கவேண்டும் என்று அம்மகாநாட்டின் அக்கிராசனராக விருந்த நம் நண்பர் டாக்டர் முஞ்சீ வெளியிட்டதற்தாக நாங்கள் சந்தோஷப்படுகிறோம்.

"மேளமடிப்பது மஸ்ஜிதுகளுக் கெதிரில் நிறுத்தப்பட வேண்டுமென்று குர்ஆன்ஷரீபில் எவ்விடத்திலுங்கூறப்படவில்லை," என்று நான் அறிவித்ததாக அஸோஸியேட்டட் பிரஸ் ஏன்மீது பழிசுமத்தி

யிருக்கின்றது. ஆதலின் யான் நாக்புரியில் கூறியவைகளை விவரமாக மற்றுமொருமுறை தெரிவிக்கின்றேன்.

அஃதாவது:—

"தொழுகையின் நேரங்களில் சப்தம் கூச்சல் முதலிய தொழுகைக்கு இடையூறானவைகள் நிகழக்கூடாதென்று இஸ்லாம், முஸ்லிம்களின் மீது கடமையாக்கி இருக்கின்றது. ஆகவே மஸ்ஜிதுகளுக்குள்ளும் வெளியிலும் நிசப்தமாயிருக்க வேண்டுமென்று முஸ்லிம்கள் வற்புறுத்துகின்றனர். தொழுகைக்கிடையூறான சப்தம் கூச்சல் முதலியவைகளைச் செய்யக்கூடாதென்று முஸ்லிம்களுக்குமட்டும் இஸ்லாம் கட்டளை யிடுகிறது. இக்கட்டளைக்கு மற்றவர்களும் உட்பட வேண்டுமென்று அவர்களைக் கட்டாயப் படுத்தும்படி முஸ்லிம்களுக்கு இஸ்லாம் அறிவிக்கவில்லை. மஸ்ஜிதுகளுக்கு முன்னால் இந்துக்கள் மேளமடிப்பது சம்மந்தமாய்ச் சச்சரவு செய்யும் முஸ்லிம்கள் தங்களின் மதக்கடமைகளை மற்றவர்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுகட்டாயப் படுத்தும் குற்றத்திற்காளாகின்றார்களென நான் கருதுகிறேன். முஸ்லிம்கள் இக்குற்றத்தைச் செய்யும்படி இஸ்லாம் அனுமதிக்கவில்லை. மஸ்ஜிதுகளின் சுவர்களுக்கு முன் மேளமடிப்பதால் மஸ்ஜிதுகளுக்குள்ள கீர்த்தி எடுபட்டு விடுமென்றாவது குறைந்து விடுமென்றாவது நான் ஒப்புக்கொள்ளத்தயாரா்யில்லை" என்பதே.

இத்தகைய போராட்டங்களில் தன் சகோதரனை நெருக்கி அதிக பாத்தியதையைப்பெற்றுக் கொள்ளுகிறவன் ஜெயசீலன் அல்லவென்பதும், தன் சகோதரனுக்காகத் தன் பாத்தியதையை விட்டுக் கொடுத்து அதிக தியாகஞ் செய்து பணிந்து போகிறவனே நிச்சயமாய் ஜெயசீலன் என்பதும் சதா என் கொள்கையாக விருந்து வருகின்றது. நாகபுரி முஸ்லிம்கள் புகழத்தக்க காரியத்தைச் செய்து மற்றவர்களுக்கும் ஒரு நல்லபடிப்பினையை யுண்டுபண்ணி விட்டார்கள். ஆகவே நான் நாகபுரியில் கூறியது போல் நாகபுரி முஸ்லிம்களே ஜெயசீலராவார்.

குறிப்பு:—

இது ஜனவரி மீ 19உ வெளியான "ஹம்தர்த்" என்னும் உர்தூ பத்திரிகையிலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது. மௌலானா அவர்கள் "பார்வேர்டு" பத்திரிகையின் பிரதிநிதியிடம் அறிவித்த மேற்கூறிய விஷயம் ஜனவரிமீ 24உ சைபுல் இஸ்லாமில் பிரசுரமாகியிருந்துங்கூட பிப்ரவரி மீ 1உயில் வெளியான தாருல் இஸ்லாமில்

"மௌலானா அபுல்கலாம் ஆஜாத் நாகபுரியில் செய்த ஓர் பகிரங்கப்பிர சங்கத்தில் மஸ்ஜிதுகளுக்கருகில் வாத்திய கோஷமானது நிறுத்தப்பட வேண்டுமென்று குர் ஆன்ஷரீப் வேதம் எவ்விடத்திலும் கூறவில்லை என்று அங்கு கூடியிருந்த முஸ்லிம்களுக்கு எடுத்துக் காட்டினார். ஆயினும் முஸ்லீம்கள் தங்களுடைய குறையைக் காணுமல் பிறரு டைய குற்றத்திலேயே கண்வைத்திருக்கிறார்கள்......................... என்று வரையப்பட்டிருப்பது ஆச்சரியமாக விருக்கின்றது. மௌ லானா அபுல்கலாம் ஆஜாத் அவர்கள் கூறியிருக்கும் வண்ணம் அஸோசி யேட்டட் பிரஸைப் போலவே தாருல் இஸ்லாமும் மௌலானா அவர்க ளின் மீது வீண்பழி சுமத்துகின்றது. இது மதாந்தரப்பத்திரிகை களுக்கு அழகல்ல.

ஜனுப். எஸ். எம். முஹிய்யித்தீன் அவர்கள் சிலோனி லிருந்து எழுதிய கடிதம்.

...............ஆசிரியர் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்..........

அல்கலாமை வாசித்த பின்னர் உண்மையில் எனக்கோர் உற்சாக மேற்பட்டு அதுமுதல் அல்கலாமுக்கு வேலை செய்ய முற்பட்டுவிட் டேன். என் ஆப்த சிநேகிதர்களான ஜனுப் எம். கச்சிமுஹிய்யித் தீன் (1), வி. எம். ஷம்சுதீன் ஸாஹிப் (2), ஆகிய இவர்களின் உதவி யாலும் என் முயற்சியாலும் அல்கலாமுக்கு 100 சந்தா சேர்த்தனுப்பு வதாக இக்கடிதத்தின் மூலமாய் வாக்களிக்கிறேன்......................

(ஒப்பம்)

காலண்டர் வரவு.

மேல்கண்ட நிரூபத்திற் குறிப்பிட்டிருக்கும் ஜனுப் எம். கச்சி முஹிய்யித்தீன் அவர்களால் அனுப்பப்பட்ட காலண்டர் வரப்பெற் ரோம்.

இக்காலண்டரில் கமால் பாஷா அவர்களின் உருவப்படம் வெகு நேர்த்தியாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் இருபுறங்களிலும் அல்கலாமின் விளம்பரம் மிகவும் அழகாய்ப் பிரசுரிக்கப்பட்டும், நடு வில் ஆங்கிலம், தமிழாகிய இருதேதிகளும் ஒருங்கே அச்சடிக்கப் பட்டு தினசரி கிழிக்கக்கூடியதாகவும் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இதைக் கண்ணுற்ற எமக்கு அளவில்லா ஆச்சரியமும் சந்தோஷமு மேற்பட்டன. இந்நண்பர்கள் அல்கலாமின் மீது கொண்டுள்ள அன் பின் காரணமாகச் செய்யும் ஊழியத்தை யொட்டி இவர்களுக்காக அல்லாஹுதஆலாவின் சமுகத்தில் நல்லதுஆவை இறப்பதன்றி வேறு என்ன சன்மானஞ் செய்யக்கூடும். அல்லாஹுதஆலா இவர்க ளுக்கு நல்லருள் புரிவானாக.